REGIST... G. P. O. AS A NEWSPAPER. T'Phone: 805

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

தாபகர்: நா. பொன்னையா

மலர் 22 | சுன்னாகம், நந்தன ஆனி ௨ 15-6-52 ஞாயிறு (காந்தி ஆண்டு 83) | இதழ் 47

சாம்பசிவம் அன்ட் கோ.
38 கஸ்தூரியார்வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம்
H. M. V. றேடியோ
H. M. V. கிராமபோன்
H. M. V. றெக்கோட்டுகள்
விற்பனைக்கிருக்கின்றன
N. SAMBASIVAM & Co.,
38, Kasturiyar Road, Grand Bazaar, JAFFNA

★ மக்களின் சந்தேகங்களைத் தீர்த்து வைப்பதற்கு அரசினர் காலந் தாழ்த்தாது ஒரு விசாரணைச் சபையை ஏற்படுத்துவதே முறை.

# எதிர்க்கட்சியினர் வயிற்றெரிச்சல்!

## தோல்வியைப் பூசி மறைக்குந் தந்திரம்



எதிர்க்கட்சித் தலைவர் பண்டாரநாயகா

நமது அரசியல் நிருபர்

விஷயமறியாத சாதாரண மக்களின் உணர்ச்சியைத் தூண்டிவிடுவதாற் பொதுமக்களின் அமைதியான வாழ்க்கைக்கு ஆபத்து உண்டாகிவிடுகின்றதென்பதற்குச் சென்ற செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள காலிமுகமைதானத்தில் நடைபெற்ற மாபெருங் கூட்டத்தின் பின்னர் நிகழ்ந்த பயங்கர சம்பவங்கள் சான்றாகும். பொதுத்தேர்தலை அரசாங்கம் நேர்மையான முறையில் நடாத்தவில்லையென எதிர்க்கட்சியினர் குறை கூறுகின்றனர். தேர்தல் சம்பந்தமான ஊழல்களை விசாரணை செய்வது அவசியமென்பதை வற்புறுத்துவதற்காகப் பிரதிநிதிகள் சபையிலுள்ள எதிர்க்கட்சியினர் இக்கூட்டத்தை ஏற்படுத்தியிருந்தனர். இத்தகைய ஒரு மாபெரும் கூட்டத்தைக் கொழும்பு முன்னர் ஒருபோதும் கண்டதில்லையென இப்பத்திரிகையின் கொழும்பு நிருபர் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்துக்கு எதிர்க்கட்சித் தலைவரான திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா அவர்கள் தலைமை தாங்கிப் பேசியபோது மிகவும் ஆராய்வுடனும் சாவதானத்துடனுமே பேசியிருக்கின்றார். ஆனால் வேறு சில தலைவர்களின் அனற் கக்கும் வார்த்தைகள் அங்கு கூடிய ஒரு சில மக்களின் உணர்ச்சி வெறியை நன்கு தூண்டிவிட்டன வென்றே கூறவேண்டியிருக்கின்றது.

அன்று இரண்டு இலட்சம் மக்கள்வரை பிரசன்னமாயிருந்தனர் என அக்கூட்டத்திற் பேசிய வவனியாப் பிரதிநிதி திரு. சுந்தரலிங்கம் அவர்கள் முடிவுகட்டியிருக்கின்றார்கள். சுயேச்சையாளரான இப்பேராசிரியர் அன்று பேசியதைக் கவனியுங்கள்: "இந்நாட்டிலே தேர்தல் நடைபெற்றதுபோல வேறு எந்த நாட்டிலாவது தேர்தல் நடைபெற்றிருக்குமாயின் நாட்டு மக்கள் அந்தக் கட்டடத்தின் (பிரதிநிதிகள் சபைக் கட்டடத்தைச் சுட்டிக் காட்டி) கற்கள் அனைத்தையும் தகர்த்தெறிந்திருப்பார்கள். அப்படி எதுவும் இங்கு நடவாதபடியால் இந்நாட்டு மக்கள் சகல விஷயங்களையும் சனநாயக முறையிற் சமாதானமாகத் தீர்த்துக்கொள்வதையே விரும்புகின்றனர். இலங்கைச் சரித்திரத்திலேயே இப்படியான கேடுகெட்ட ஒரு தேர்தல் நடைபெற்றதேயில்லை......"

இம் மாதிரி வார்த்தைகளைக் கேட்டுவிட்டு உணர்ச்சிப்பெருக்குடன் வீடுதிரும்பிய மக்கள் பிரதிநிதிகள் சபையைத்தான் புரட்டித்தள்ளிவிட முடியாதிருந்தாலும், அப்பாரிய கட்டடத்தின் படிக்கட்டில் வைக்கப்பட்டிருந்த பூஞ்சட்டிகளையும் செடிகளையும் தவிடுபொடியாக்கிவிட்டனர் என்பதையறியும்போது, 'பேராசிரியர் சுந்தரலிங்கம் அவர்களே உஷார்! புரட்சி வாழ்க!!' என்றுதான் சொல்லத் தோன்றுகின்றது. ஆனால் இது அகப்புரட்சியா? அல்லது அரசியல் அவல நிலைப்புரட்சியா? என்பதுதான் விளங்கவில்லை!

கேவலம், அன்று காலிமுக மைதானத்திலிருந்து திரும்பிய சனசமுத்திரத்தின் ஒரு பகுதியினர் வீதியில் ஓடும் பஸ் வண்டிகள் மீது கற்களை வீசிப் பெண்டுபிள்ளைகளையும் ஏனைய பிரயாணிகளையும் ஆபத்துக்குள்ளாக்கினர் என்றால் இடதுசாரிகளாலும் அவர்களுக்கு வால்பிடிப்பவர்களாலும் நாட்டுமக்களுக்கு ஒருபோதும் நன்மை யேற்படப் போவதில்லையென்பது பட்டவர்த்தனமாகும்.

தோழர் கெனமன் ஒரு சமயம் திரு. பண்டாரநாயக

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

# செத்தவரின் சக்தி

## தேர்தல் கண்ட பெரு வெற்றி

இலங்கையில் நடைபெற்ற பொதுதேர்தலைப்பற்றி அமெரிக்கப் பத்திரிகைகளும் பிரிட்டிஷ் பத்திரிகைகளும எத்தனையோ விதமாக எழுதித்தள்ளுகின்றன. உவாஷிங்டன் பத்திரிகை ஒன்று மூர்த்தி சிறிதானுலும கீர்த்தி பெரிதெனக் குறிப்பிட்டு 'இலங்கையிலிருந்து நல்ல செய்தி' என்ற தலைப்பில் எழுதுவதாவது: "ஆசியாவிலுள்ள எத்தனையோ நாடுகள் அமைதி குன்றித் தத்தளிக்கின்றன. ஆனால் உருவிற் சிறிய இலங்கையில் அரசியல் உறுதிப்பாடு நிலைபெற்றிருக்கின்றது. இது மகிழ்ச்சி தரும் செய்தியாகும். ஆசியாவில் இதுபோன்ற நாடுகள் மூர்த்தியிற் சிறியனவாக இருந்தாலும் கீர்த்தியிற் பெரியவைதாம்."

"செத்துப்போன மனிதன் ஒருவர் சென்றவாரம் இலங்கையில் நடைபெற்ற தேர்தலை வெற்றிபெற உதவி புரிந்தார்" என அமெரிக்காவில் வெளியாகும் நியூஸ்வீக் என்ற வாரப் பத்திரிகை இலங்கைத் தேர்தலைப்பற்றி எழுதியுள்ளது. அது தொடர்ந்து கூறுவதாவது: "இந்தச் செத்த மனிதன் வேறெவருமல்ல திரு. டொன் ஸ்டீபன் சேனநாயகாவேதான். இத் தேசியவாதியைப் பிரிட்டிஷ் அரசாங்கம் ஒருசமயம் சிறையில் அடைத்து வைத்திருந்தது. இந்தத் தேசியவாதியே பின்னர் சாம்ராச்சியத்திலுள்ள மிகச் சிறியதும் பராயத்திற் குறைந்ததுமான நாட்டின் முதலாவது பிரதமராகப் பதவியேற்றார். இப்பராக்கிரமசாலி விளையாட்டில் மிகுந்த ஆர்வம் படைத்தவர். யானையின் பேச்சை விளங்கிக்கொள்ளும் திறமை மிக்க டி. எஸ். அவர்கள் இலங்கையின் தேயிலை, றப்பர் போன்ற விஷயங்களைப் பற்றிப் புகைப்பறக்கப் பேசக்கூடியவர். இவர் ஓடும் குதிரையிலிருந்து கீழ வீழ்ந்து மாண்டார். தந்தையின் ஞாபகம் இலங்கை மக்களின் உள்ளங்களில் எல்லாம் குடிகொண்டிருப்பதால் அவரது தனயனை மீண்டும் ஆதிக்கம் வகிப்பதற்குத் தெரிந்தெடுத்திருக்கின்றனர். நான்கு தினங்களாக சாரம் உடுத்திய வாக்காளர்கள் மழை வெயிலெனக் கவனியாது திரள் திரளாகக் கொழும்பிலுள்ள அப்புரவான பெரிய வீதிகளாற் சென்று

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

# தேர்தல்விநோதம்

மழைவிட்டுந் தூவானம் நீங்காதவாறுபோல் தேர்தற் காலத்து உண்டான ஆத்திரமும், மனவைரமும், பிடிவாதமும் இன்னும் அகலாது நின்று மக்களை ஆட்டி வருத்துகின்றன. களனிப் பிரதேசத்தில் இரு கட்சியினர்க்கிடையிற் பெருங் கலகம் ஏற்பட்டதாகவும், ஒருவர் மாண்டனராகவும் செய்தி கிடைத்துள்ளது. வேறு சில இடங்களிலும் இப்படியாகக் கலகங்கள் நிகழ்வதாகவும் பொலிஸார் எச்சரிக்கையாகவிருந்து கலகங்களை அடக்கி வருவதாகவுங் கேள்வி. இது என்ன கொடுமை! வெற்றியும் தோல்வியும் அடைந்த அபேட்சகர்கள் கை குலுக்கி நட்புப் பாராட்டிச் செல்ல, அவர்களை ஆதரித்தவர்கள் எல்லையின்றி ஆத்திரங் காட்டி நிற்கவேண்டுமா? வெற்றியிற் குதூகலமடையக் கற்றுக்கொண்டது போலத் தோல்வியையும் பொறுமையுடன் ஆத்திரப்படாது ஏற்கப் பொதுமக்கள் கற்றறிய வேண்டாமா?

**காடைத்தனம்**

நாத்தாண்டியாவில் அகப்பட்ட நாற்றொருவர் ஆளுக்கு ஆயிரம் ரூபாய் பிணையில் விடப்பட்டுள்ளனர். கல்லுகள், பொல்லுகள், வெடிகுண்டுகள், துப்பாக்கிகள் என்பனவற்றுடன் கொழும்பிலிருந்து இவ்வளவுதூரம் தமது கெட்டித்தனத்தைக் காட்டச்சென்றாரே. என்ன துணிவு! செம்படை வீரர்களாகவே இவர்கள் கருதப்படுகின்றனர். தமது காடைத்தனத்தால் தமது கட்சிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுக்கலாமென்று பிழையாக விளங்கிச் சென்றனர். இவர்களை உபயோகித்த இடதுசாரிக் கட்சியினர் போக்கு வேறெப்படித்தானிருக்கும்? இரத்தப் பெருக்குடன் கூடியபுரட்சியைவிரும்புவோர் இவ் வழியை உபயோகித்தது நூதனமல்லவே? இக் கட்சியினர் கையில் அரசாங்கம் அகப்படின் நாட்டு மக்கள் நிலை யாதாக முடியுமென்று சொல்லவும் வேண்டுமோ? சர்வாதிகார ஆட்சியைக் கொண்டுவர எத்தனிக்கும் இடதுசாரிகள் சமீபத்தில் நடந்த தேர்தலிற் படுதோல்வியடைந்ததைக் கண்டு அமெரிக்க, பிரிட்டிஷ் அரசினர் அடையும் சந்தோஷத்துக்கு அளவில்லை. ருஷ்யாவின் ஆதிக்கம் இலகுவில் கீழைத்தேச நாடுகளில வேர் வைக்காதென்பதை இந்தியாவிலும் இலங்கையிலும் நடந்த பொதுத் தேர்தல்கள் நன்கு புலப்படுத்தி விட்டன. இனியாவது கொம்யூனிஸ்டுகள் தமது புரட்சிக கொள்கைகளை மாற்றுவார்களா? ருஷ்யாவை நோக்கிக் கற்க வேண்டியவிஷயங்கள் பலவுள. ஆனால் முற்று முழுதாக அந்நாட்டிற்காகத் தமது சாதி, சமயம், பண்பாடு என்பனவற்றைக்கூறி விற்றுவிடுவது மகா கொடுமையாகும். இடதுசாரியினருக்கு அழிவுவேலை தெரியுமேயன்றி, ஆக்கவேலையென்பது சிறிதளவுந் தெரியாது.

**பண்டாவின் கதி**


மொழியையும் சமயத்தையும் காட்டிப் பட்டத்தில் ஏற முயன்ற திரு. பண்டாரநாயகா அவர்கள் அடைந்த கதியே கதி! இடதுசாரிகள் உதவியைப்பெற்று முதன்மையடையலாமென்றெண்ணினர். இடதுசாரிகளோ இவர் சட்டையிற் புகுந்து வெற்றி பெறலாமென்று வேடங் காட்டினர். பொதுமக்கள் இவர்கள் ஏமாற்றங்களை உள்ளபடி அறிந்து இவர்களை ஒதுக்கி விட்டனர். சர்வாதிகாரத்தைப் புரட்சியாற் பெறவிரும்பும் இடதுசாரிகளுடன், சனநாயக அரசியலை ஓம்பும் திரு. பண்டாரநாயகா எப்படி இணங்கிப் பொருத்தனைசெய்ய முன்வந்தாரோ தெரியவில்லை. சுட்டமண்ணும் பச்சைமண்ணும் எப்படி ஒட்டும்? திரு. பண்டாரநாயகா கொண்ட கோலம் வீண் எடுப்பாக முடிந்துவிட்டது.

ஸ்ரீ லங்காசுதந்திரக் கட்சித் தலைவர் தமது தோல்வியை, சேர்ச்சில் துரையுடன் ஒத்துநோக்கி ஆறுதலடைகின்றனர். எவ்வளவோ பாடுபட்டு யுத்தத்தில் வெற்றி கண்ட சேர்ச்சில் துரைக்குப் பிரிட்டிஷ் மக்கள்செய்த கைம்மாறு யாது? அடுத்த தேர்தலில் அவர்கட்சி படுதோல்வியடையச் செய்ததுதான். இத்தலைவர் நன்மைக்குக் காலமில்லை என்கின்றார். தலைதடுமாறி இடதுசாரிகளுடன் சேர்ந்து பொருத்தனை செய்பவர் கதி வேறு யாதாக முடியும்? கட்சிகட்கிடையிலும், கட்சித் தலைவர்கட்கிடையிலும் போட்டாபோட்டி, வேற்றுமை, பொறாமை, பதவிவேட்டை, பட்டவேட்டை என்பன இருக்கும்வரையும இவ்வித வீழ்ச்சிகள், குட்டிக்கரணங்கட்கு அளவேயில்[illegible]

**பழையபடி**

தமிழரசுக் கட்சித் [illegible] திரு. நாகநாதன[illegible]

(தொடர்ச்சி 4-ம் பக்க[illegible]




# என் தங்கை

— மின்மினி —

வாசகர்களே, உங்களுடைய திடசித்தத்தை நீங்களே சோதிக்கப் போகிறீர்களா? இதோ ஓர் அருமையான யோசனை: கையிற் கைக்குட்டையையும் எடுத்துக்கொண்டு என் தங்கையைப் பார்க்கப் போங்கள். கைக்குட்டையைமட்டும் விட்டுவிட்டுப் போனீர்களாயின் பின்னர் உங்கள்பாடு கஷ்டந்தான்.

கண்ணிழந்த மீனுவை வெள்ளித் திரையிற் காணும்போதும் அவளின் இதயக் குமுறல்களைக் கேட்கும்போதும் உங்கள் உள்ளம் நெக்கு நெக்குருகி ஊற்றெடுக்கத் தொடங்கும். பின்னர் ஒவ்வொரு கட்டத்திலும் பெருகிப் பெருகி ஈற்றில் ஆறாகப் பாயும்.

மீனு கண்ணிழந்தவளாகக் காணப்பட்டாலும் அவள் முகத்திற் களங்கமற்ற நெஞ்சத்தின் கனிவையுங் கஷ்டத்தின் சாயலையும் ஒருங்கே காண முடிகிறது. ஒவ்வொருவரும் மீனுவை 'என தங்கை, என் தங்கை' என்று சொல்லி அவள் கஷ்டங்களிற் பங்கெடுத்துத் தங்களை அறியாமலே அனுபவித்துக் கொண்டிருப்பார்கள்.

தன் தங்கை மீனுவுக்காகப் படாத பாடெல்லாம் பட்டு ஏங்கி ஏங்கித் தவித்து அவளையும் பறிகொடுத்து "மீனு! மீனு! ஒரு வார்த்தை என்னுடன் பேசம்மா..." என்று அவள் அண்ணன் இராஜேந்திரன் கெஞ்சும்போது நீங்கள் என்ன பாடு படுவீர்கள். இல்லை மீனுவின் உடலைத் தன் தோளின்மீது சுமந்து சென்று கடலின் அலைகளில் அவனும் ஐக்கியமாகிவிடுகின்ற அச்சமயத்தில் என்ன பாடு படுவீர்கள்.

பணவாஞ்சை பற்றிச் சிறிது அறிய விரும்புகிறீர்களா? தயவுசெய்து சித்தப்பா (கருணாகரம்பிள்ளை) வைக் கவனியுங்கள். பணப் பித்துக்கு அவரை ஒரு உதாரணமாக வைத்துப் பார்க்கலாம். சமூக சீர்திருத்தக் கொள்கைகளும் கதையிற் பின்னப்பட்டிருக்கின்றன. காதல் கட்டங்களும் குறிப்பிடத் தக்கன. மீனுவைத் தூக்கித் தோள்மேலிட்டுச் செல்லும் இராஜேந்திரனைத் தொடர்ந்தோடும் சூரியமூர்த்தியும் மேரியும் ஓட்டத்தை ஒரு தனிக்கலையாக்கிக்கொண்டார்கள் என்றே சொல்லவேண்டும்.


பொள்ளாச்சி கமலாவும் எம். ஆர். இராஜேஸ்வரியும் தில்லானா ஒன்றைத் திறமாக ஆடியிருக்கின்றனர்.

புதுமுகமாயிருந்தும் கனிவாகப் பேசி இயற்கையாக நடித்து உள்ளத்தைத் தொடும் மீனு (ஈ. வி. சரோஜா) வுக்கே என்தங்கையில் முதலிடம் கொடுக்கவேண்டும்.

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.




இந்த ட்ரேட் மார்க்கைக் கவனியுங்கள்



குழந்தைகளுக்கு இன்றியமையாதது வுட்வர்ட்ஸ் கிரைப் வாடர்



WOODWARD'S GRIPE WATER

*keeps baby well*

H. TAM W. WOODWARD LTD. LONDON, ENGLAND

சகல பயிர்களுக்கு

C C C பசளைகள்

இலங்கையின் பசளை வியாபாரத்தில் 40 வருடகால அனுபவத்தின் பயனாக

நாங்கள்

C C C

கலவைப் பசளைகளை

தரக்கூடியவர்களாக இருக்கிறோம். இவை இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் எல்லாப் பயிர்களுக்கும் ஏற்கக்கூடியதாக எமது கமத்தொழில் நிபுணர்களால் விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

இந்தக் கலவைகள் முழுவதும் மிகவும் உயர்தரமானவை; உத்தரவாதத்துடன் பரிசிலனை செய்யப்பட்டு விற்கப்படுகின்றன. இவைகள் தற்கால யந்திரங்கள் மூலம் கலந்து நெரிக்கப்பட்டிருக்கின்றன. எமது கமத்தொழில் நிபுணர்கள் உங்களுக்கு இலவசமாக ஆலோசனை கூறுவார்கள்.

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி, லிமிற்றெட்.

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

பசளைக்கு ஒழுங்கு செய்யும்போது கொழும்பு கொம்மேர்ஷல்கொம்பனியார் விற்கும் C C C கலவைப் பசளையையே பார்த்து வாங்குங்கள்.

The Colombo Commercial Company, LIMITED.

INCORPORATED IN GREAT BRITAIN LIABILITY OF MEMBERS Ltd.

தந்தி: COSSACK. தபாற்பெட்டி இல. 33. பேசுந்தந்தி இல. 5351.

[4610]

**→ ஓர் எழுத்தாளன் பொருள்களை நோக்கும் பெற்றியினாலும், வாழ்க்கையில் பெறும் அனுபவத்தின் வளத்தினாலுமே, தன் தனிப்பட்ட அக நோக்கை உண்மைகளோடு சேர்த்துக் கலையை வடித்தெடுக்கும் ஆற்றலைப் பெறுகிறான்.**

# எழுத்துக் கலை

## அதனை நான் கற்ற விதம்

**ருஷியக் கலைஞர் மாக்ஸிம் கார்க்கி எழுதியதைப் பகவதி ஜயராமன் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்**

**தனிப்பட்டவன்** என்ற முறையில் மனிதனின் சரித்திரத்தைவிடப் பொதுவாக மனித உழைப்பின் சரித்திரமும், மனித முயற்சியின் சரித்திரமும் எவ்வளவோ சுவை நிரம்பியதும் குறிப்பிடத்தக்கதுமாகும். ஏனெனில் மனிதன் நூறாண்டுகள் கூட உயிருடன் இருக்க முடியாமல் இறக்கிறான்; ஆனால் அவன் படைத்த பொருள்களோ பல நூற்றாண்டுகள் வாழ்கின்றன. விஞ்ஞானத்தின் நம்புதற்கரிய அருஞ்சாதனைகளும், விரைவுபட்ட வளர்ச்சியும்— விஞ்ஞானிகள் தம் துறையின் தனித்தன்மைச் சரித்திரத்தை அறிந்திருப்பதனால்தான் ஏற்படுகின்றன என்று திட்ட வட்டமாகச் சொல்லலாம். விஞ்ஞானத்திற்கும் இலக்கியத்திற்கும் பல பண்புகள் பொதுவாக உள்ளன; இரண்டிலும் உன்னிப்பு, பொருத்திக்காண்டல், ஆழ்ந்த கல்வி ஆகியவை அடிப்படைக் கூறுகளாக விளக்குகின்றன. ஒரு கலைஞன், ஒரு விஞ்ஞானியைப்போலவே கற்பனையிலும், உள்ளுணர்ச்சியிலும் சிறந்து விளங்கவேண்டியவனாகிறான். கற்பனையும் உள்ளுணர்வுமே இதுவரை கண்டுமுடிக்க முடியாத உறவுகள்மூலம் உண்மை என்னும் சங்கிலியில் விடுபட்டிருக்கும் இடங்களை இணைக்கின்றன; இவை, ஒரு விஞ்ஞானி சில கொள்கைகளையும், தோற்றங்களையும் கற்பித்துக்கொள்ளவும், அதன்மூலம் ஏறத்தாழச் சரியாகவும், வெற்றியுடனும் இயற்கையின் தோற்றத்தையும், ஆற்றல்களையும் ஆராயவும் உதவி புரிகின்றன. இந்த ஆராய்ச்சி மனிதனின் சிந்தைக்கு உட்பட்டுப் பண்பாட்டைத் தோற்றுவிக்கிறது; இப்பண்பாடு நம் சிந்தையும், நுண்ணறிவும் சேர்ந்து பெற்ற குழந்தையாக வளர்கிறது.

இலக்கியத்தைப்படைக்கும் கலைக்கும், பாத்திரங்களையும் உருவங்களையும் உண்டாக்கும் கலைக்கும்—கற்பனை, உள்ளுணர்வு, ஒருவன் தன் மனத்தில் தன் கருத்தைப் பதிய வைக்கும் திறன்—ஆகிய மூன்றும் இன்றியமையாதன. ஓர் எழுத்தாளன் தனக்குப் பழக்கமான ஒரு கடைக்காரன், அலுவலாளன் அல்லது தொழிலாளி—இவர்களைச் சித்திரிக்கும்போது, அவன் ஏறத்தாழ ஒருவரின் வெறும் மாதிரியைத்தான் உண்டாக்குகிறான்; ஆனால் இத்தகைய மாதிரி வெறும் புகைப்படமாக விளங்குமேயன்றி, நமது அல்லது நம்மை ஒத்தவர்களின் வாழ்க்கையைப் பற்றிய அறிவுக்கு ஏதும் உதவாது; மேலும் இது எவ்விதப் படிப்பினையுமின்றி ஒழியும்.

ஓர் எழுத்தாளன் தன் அனுபவத்தில் இருபது அல்லது ஐம்பது அல்லது நூறு கடைக்காரர், அலுவலாளர், தொழிலாளர் — ஆகியவர்களிடம் பழகவேண்டும்; அவர்களிடத்து அமைந்திருக்கும் அவர்களுக்கேயுரிய போக்குகள், பழக்க வழக்கங்கள், சுவைகள், சைகைகள், நம்பிக்கைகள் முதலியவற்றை ஒரு வகுப்பு என்ற முறையில் வைத்துக் கவனிக்கவேண்டும்; கவனித்தவற்றைத் தன் சொந்தப் படைப்பான கடைக்காரன், அலுவலாளன் அல்லது தொழிலாளி என்பவன் வாழ்க்கையிற் செறியச் செய்யவேண்டும்; அப்போதுதான் அவ்வெழுத்தாளன் தனக்கென்ற ஒரு பாத்திரத்தைத் தோற்றுவித்ததாகச் சொல்லலாம். அப் பாத்திரம் ஒரு நல்ல கலைப் படைப்பாகவும் இலங்கும். ஓர் எழுத்தாளன் பொருள்களை நோக்கும் பெற்றியினாலும், வாழ்க்கையில் பெறும் அனுபவத்தின் வளத்தினாலுமே, தன் தனிப்பட்ட அக நோக்கை உண்மைகளோடு சேர்த்துக் கலையை வடித்தெடுக்கும் ஆற்றலைப் பெறுகிறான். இதனாற்றான் பால்சாக் என்ற பிரஞ்சுப் பேரறிஞர் இன்ப வகுப்பை (bourgeois)ச்சார்ந்தவனாயிருந்தும், தன் நவீனங்களில் அவ் வகுப்பினரின் சிறுமையையும், கண்ணியமின்மையையும், அழுத்தமாகவும் தெளிவாகவும் ஈவிரக்கமின்றி வெளிப்படுத்த முடிந்தது. இவர் போன்றே பல எழுத்தாளர்கள் தம் காலம், வகுப்பு என்பவற்றின் கண்ணாடிகளாக விளங்கியமைக்குப் பல சான்றுகள் உள. இச் சான்றுகளினின்று விலங்குகளின் நிலைபேறு, பராமரிப்பு, இனப்பெருக்கம், இனச் சிதைவு, வாழ்க்கைப் போராட்டம் ஆகியவற்றைப்பற்றி ஆராய்கிற விஞ்ஞானியின் தொழிலுக்கு ஒரு கலைஞனின் வேலை எந்தவிதத்திலும் மதிப்புக் குறைந்தது அன்று என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

வாழ்க்கைப் போராட்டத்தின் தற்காப்பு வளர்ச்சி, மனிதனிடத்தில் இரண்டு மேன்மையான ஆக்கச் சக்திகளை வளர்த்துவிட்டது. இச் சக்திகள் அறிவு, கற்பனை என்பன. முதலாவதை இயற்கைத் தோற்றம், சமுதாய வாழ்க்கைத் தோற்றம் ஆகியவற்றை ஆராயவும், ஒப்பிடவும், விளக்கவும் அமைந்த திறன் என்று சொல்லலாம்; சுருங்கச்சொன்னால் அறிவு என்பது சிந்திக்கும் திறனே என்னலாம். கற்பனை என்பதும் ஒருவகைச் சிந்தனையே. இது உலகத்தைப்பற்றிய சிந்தனை; ஆனால் உலகத்தை ஒரு வடிவத்தில்—அதாவது கலைவடிவத்தில் — சிந்தித்தல் என்பது இதற்குப் பொருந்தும். சிலர் கற்பனை என்பது பொருள்கள் அல்லது இயற்கையின் இயல்பான தோற்றம்—இதனோடு மனிதத்தன்மைகள், உணர்ச்சிகள், கிடக்கைகள் — முதலியவற்றைப் பொருத்திக் காணுவது என்கிறனர்.

“வாடையின் புலம்பல்,” “கவலை தேங்கிய நிலவின் பொழிவு,” “பழங்கதையைப் பற்றி ஆற்றின் முணுமுணுப்பு” “அடவியின் சீற்றம்” — என்றும், “அந்த நீர் கல்லை அசைக்க முயன்றது,” “அந்தப் பாறை எதிர்ப்புக்கு அஞ்சிற்றேனும் வழிவிடவில்லை,” “அந் நாற்காலி வாத்தைப் போலக் குறுகுறுத்தது,” “அம் மிதியடி மேற் செல்ல மறுத்தது,” என்று மெல்லாம் நாம் பேசுகிறோம்; கேட்கிறோம். “அச்சாளரத்தின் கண்ணாடிகள் வேர்த்துவிட்டன” என்கிறோம்; ஆனால் வேர்வைச்சுரப்பிகள் கண்ணாடிகளுக்கு ஏது என்பது நமக்குத் தெரியாதா?

இவ்வாறு சொல்வதெல்லாம் இயற்கையின் தோற்றத்தை நாம் சுலபமாக அறிந்துகொள்வதற்குத்தான். இதற்குக் கிரேக்க மொழியில் புனைவியல் (Anthropomorphism) என்று பெயர். மனிதன் தான் காணும் யாவற்றிலும் தன் தன்மைகளையே பொருத்திக் காண்கிறான் என்ற உண்மையை நாம் இத்தருணத்தில் அறிந்துகொள்ளவேண்டும். அதாவது அவன் தன் தன்மைகளையே எங்கும் காண்கிறான்; தன் தன்மைகளையே எங்கும் பொருத்துகிறான்; அவற்றையே எல்லா இயற்கைத் தோற்றங்களிலும் கொண்டு செறிக்கிறான்; அவன் தன் உழைப்பாலும் நுண்ணறிவாலும் வனைந்த பொருள்களிலும் அவற்றையே அமைக்கிறான். சிலபேர்கள் கற்பனை என்பது இடங் கடந்துவிட்டதாகவும், அதனை இலக்கியத்திற் கையாளுவது ஊறுபாடானதாகவும் கருதுகின்றனர்; ஆனால் இவர்களே சமயங்களில் “உறைபனி காதை அடைத்துவிட்டது,” “பரிதி சிரித்தது,” “மே வந்துவிட்டது” என்றும், மழைக்குக் கால் இல்லாது போயும் “மழை வரத் தொடங்கிவிட்டது” என்றும், இயற்கைத் தோற்றம் நம் ஒழுக்க விதிக்குக் கட்டுப்பட்டது • அல்லவாயினும் “இயற்கை நிலை நடுக்கத்தைத் தருகிறது” என்றும் தம்மை அறியாது கூறுகின்றனர்.

இலக்கியத்தின் அடிப்படைப் போக்குகள் அல்லது கூறுகள் என்பதை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்: அவை முனைப்பு நெறி (Romanticism) என்றும் மெய்ந்நெறி (Realism) என்றும் பெயர் பெறும். மக்கள், அவர் தம் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பற்றி உண்மையாக, மெருகேற்றாமல் உள்ளதை உள்ளவாறு இயம்புதல் மெய்ந்நெறி. முனைப்பு நெறியைப் பற்றிப் பல நெறிமுறைகள் வழங்குகின்றன; ஆனால் இலக்கியச் சரித்திரக்காரர் யாவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய, திருப்திகரமான ஒரு சூத்திரம் இதுவரை கிடைக்கவில்லை. முனைப்பு நெறிக்குள்ளே, மறுபடியும் நாம், நுண்மையான இரு வேறுபட்ட போக்குகளை அறிந்துகொள்ள வேண்டும்; இவற்றை உயிரற்ற முனைப்புநெறி, உயிருள்ள முனைப்புநெறி என்று கூறலாம். உயிரற்ற முனைப்பு நெறி சில சமயங்களில் உண்மையின் சாயலைத் தன்னுள் அடக்கிக்கொண்டு மக்களை உண்மையோடு சமாசப்படுத்தும்; சில சமயங்களில் மக்களை உண்மையினின்று பிறழச் செய்து பயனற்ற முன்னெண்ணங்களில் அவர் தம் மனத்தைப் படிவிக்கும்; இன்னும் சில சமயங்களில் வாழ்க்கையைப் பற்றிய அழிவு தாத்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

# கவிமணி மண்டபம்

[தேரூரில் நிறுவப்பெற்ற கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை நினைவு நிலையத்தைச் சென்னை இராசதானிக் கலாசாலைப் பேராசிரியர் டொக்டர் கே. கனகசபாபதிப்பிள்ளை அவர்கள் 6-6-52-ல் திறந்து வைத்தார்கள். கவிமணி மண்டபத்தை வாழ்த்திப் பாடப்பெற்ற பாடல்கள் இவை. ப-ர்.]

தேசிகவி நாயகனைத் தேர்ந்ததமிழ்ச் செல்வனை
ஆசைக் கவிமணியை அன்பனை—நேசமுடன்
புத்தி புகட்டிப் புதுவழி காண்பவனை
நித்தமும் நெஞ்சே நினை.

கன்னி பகவதி காத்தவளே காசினியில்
தன்னே ரிலாத தனிப்பொருளே—என்னினிய
சிந்தை குடிகொண்ட தேசிகவி நாயகன்தான்
சந்ததமும் வாழவரந் தா.

தேவி அழகி[1]யுன் சேவடியைச் சேவித்துப்
பூவைச் சொரிந்துநிதம் பூசிப்பேன்—ஆவலெழு
தேவிப் பெயர்தாங்கும் தேரூர் திருநிலையம்
தாவி வளரவரந் தா.

தேரா னழகிய [2]சோழநல் லூராளும்
பேரழகி பூரணி பேரருளால்—பாரறியத்
தேவித் திருநாமம் தாங்கியெழு மண்டபம்
பூவுலகில் வாழ்க பொலிந்து.

சிந்தை குடிகொண்ட தேவி உமையருளால்
முந்தி [3]யிரதபுரி மூதூரில்—வந்தமைந்த
கண்ணுக் கினிய கவிமணி மண்டபம்
மண்ணுலகில் வாழ்க வளர்ந்து.

பாலுங் கனியும் பழிக்கக் கவிபாடும்
சீலமிகு தேவித் திருப்பெயரால்—ஆலயமாய்க்
கால மிடங்கண்டு கட்டிய இந்நிலையம்
ஞாலமிசை வாழிய நன்கு.

ஏரின் முழக்கமே எங்கும் முழங்கியெழும்
பேரும் புகழ்மலிந்த பேரூராம்—தேரூரில்
நித்தமும் தேவி நினைவு நிலையமிது
இத்தரையில் வாழ்க இனிது.

கன்னிக் கடலேபோல் காந்திப் பெயரேபோல்
மன்னு மிமய மலையேபோல்—தென்னவர்
செந்தமிழ்ச் செல்வம்போல் தேவித் திருநிலையம்
எந்நாளும் வாழ்க எழுந்து.

1. அழகி: தேரூரில் கோயில்கொண்டிருக்கும் தெய்வம்.
2. அழகிய சோழநல்லூர்: தேரூர்.
3. இரதபுரி: தேரூர்.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

இலங்கைச் சரித்திரமும் உலக சரித்திரமும்

இரண்டாம் பாகம்

**உலக சரித்திரம்**

விலை ரூபாய் 3/-

**திரு. எஸ். எவ். டி சில்வா அவர்கள்**

சிரேஷ்ட பாடசாலைத் தராதரப்பத்திர (S. S. C.) வகுப்புக்கென எழுதிய ஆங்கில நூலின் தமிழாக்கம்.

முதலாம் பாகம்

**இலங்கைச் சரித்திரம்**

ஏற்கெனவே வெளிவந்துவிட்டது

விலை ரூபாய் 3/-

**ஸ்ரீலங்கா பப்ளிஷிங் கொம்பனி**

111, டாம் வீதி, கொழும்பு.

[4619—iii]

புத்தகங்கள், பத்திரிகைகள், விற்பனையாளர்கள்.

தமிழ்ப்பண்ணை

யாழ்ப்பாணம்.

# ஈழகேசரி

சுன்னாகம், நந்தன ஆனி உ
— காந்தி ஆண்டு 83 —
பேசும் தந்தி இல. 805


## பாட புத்தகங்கள்

வித்தியாசாலைகளில் மாணவர்கள் பயில்வதற்குரிய பாட புத்தகங்கள் விஷயமாக அரசினர் புதிய பிரமாணங்கள் கொண்டுவந்துள்ளார். அப் பிரமாணங்கள் அவசியமா என்பது ஆராயற்பாலது. அரசினர் அங்கீகரித்த புத்தகங்களே பாட புத்தகங்களாக வகுப்புக்களிற் கற்பிக்கப்படவேண்டுமென்ற நியதியும்ஏற்படுகின்றது. மாணவர்கட்கு ஏற்ற புத்தகங்கள் யாவை என்பதை ஆராய்ந்து வகுப்பதற்கு ஒருசபையையும் அரசினர் ஏற்படுத்தியுள்ளார். இச்சபையினர் தீர்ப்பே முடிவானதாகக் கொள்ளவேண்டும். அரசினர் இவ்விஷயத்தில் அக்கறை காட்டுவதைப் பற்றி நாம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அரசினர் இவ்விஷயத்தைக் கையாளும் முறை மிகப் பிற்போக்கானதென்பதையே இங்கு குறிப்பிடுகின்றோம். இதுவரையும் இவ்விஷயமாக நிலைபெற்ற ஒழுங்குகள் மாற்றப்பெற்றுப் புதிய ஏற்பாடுகள் கொண்டுவரமுன்னர் ஆசிரியர்களின் அபிப்பிராயத்தையும் அரசினர் ஆராய்ந்திருப்பின் பெரு நலமாயிருக்கும்.

அரசினர் இதுவரையும் பாட புத்தகங்களை அங்கீகரித்து வந்தனரே யன்றிப் பாட புத்தக விஷயமாகக் கட்டாயமான ஏற்பாடுகளைச் செய்திலர். மாணவர் கல்வி பயிலும் வகுப்புகட்கு ஏற்பப் பாட புத்தகங்களை ஆசிரியர்களே இதுவரையும் தெரிந்து ஏற்படுத்தி வந்தனர். இந்தவுரிமை மாணவருடன் நெருங்கி நாளாந்தம் ஊடாடும் ஆசிரியர்கட்கே யிருக்கவேண்டும். இவ்வுரிமையை அரசினர் பறித்து அதை ஒரு சபையினர் கையில் வழங்கிவிடுவது எப்படிப் பொருந்துமோ தெரியவில்லை. குறிக்கப்பட்ட புத்தகங்களன்றி வேறு பாட புத்தகங்கள் கற்பிக்கப்படக் கூடாதென அரசினர்வரையறுப்பின், அது ஆசிரியர் உலகம் இதுவரையும் அனுபவித்து வந்த பெரிய சுதந்திரத்தைப் பறிமுதல் செய்வதாகுமே. இவ்வித சர்வாதிகாரமுறை ஏற்படுவதை எவரும் விரும்ப மாட்டார். இப் புதிய பிரமாணத்தாற் கல்வி விருத்தியும் பாட புத்தகங்கள் பெருக்கமும் பெரிதும் தடைப்படாதா என்று கேட்கின்றோம்.

வேண்டுமாயின் பாட புத்தகமாக எழுதப்படும் நூல்கள் அரசினர் பார்வைக்கு அனுப்பப்பட வேண்டுமென்ற நியதியை ஏற்படுத்தலாம். அப்புத்தகங்கள் [illegible]மய சன்மார்க்கப் புரட்சி[illegible] மக்கட்கிடையில் துவே[illegible] வேற்றுமைகள் [illegible]ற்றை உண்டாக்கு[illegible] அவைகளை அரசினர் [illegible] புத்தகமாக ஏற்படுத்தாது தடுத்து விடலாம். அப்படியன்றி அரசினர் நியமிக்கும் சபையினரின் தஞ்சத்தில் நம்பிப் பாடபுத்தகங்கள்எழுதப்பட வேண்டியதாயின் நமது நாட்டின் கல்வி நிலை எப்படி உன்னத நிலையை அடையுமோ? பொதுவாகப் பாட புத்தகங்கள் எழுத முன் வருவோர் ஆசிரியர்களே. வகுப்புகட்கு ஏற்ப மாணவரின் தகுதியை நோக்கிப் பாட புத்தகங்கள் இயற்றும் ஆற்றல் அவர்கட்கு உண்டென்பதை எவரும் மறுக்க முடியாது. அப்படியாக இயற்றப்படும் பாட புத்தகங்களை வேறொரு சபையினர் நினைத்தபடி நோக்கி ஏற்பதும் தள்ளுவதுமாயின் அது எப்படி முறையாகும்? ஆசிரியர்கள் மாத்திரமே இவ்விஷயத்தை முடிவுசெய்யும் தகுதியும் ஆற்றலுமுடையர் என்பதை அரசினர் உணரவேண்டும்.

பல்வேறு வகுப்புகளிற் பயிலும் மாணவர்கட்கு ஏற்பப் பாட புத்தகங்கள் அமைய வேண்டும் என்ற கொள்கையுடன்றான் அரசினர் இப்புதிய பிரமாணத்தைக் கொண்டுவருகின்றனர். இந்த நோக்கம் பிழையென நாம் கூற முன்வரவில்லை. ஆனால், வகுப்புகட்கு ஏற்ற பாட புத்தகங்கள் யாவையென்பதை ஆசிரியர்களே நன்கு முடிவுசெய்யும் ஆற்றல் படைத்தவர்என்பது எமது கருத்து. பல்வேறு துறைகளிலும் பாடபுத்தகங்கள் போதியளவு எழுதப்படவேண்டிய இக்காலத்து அரசினர் சட்டங்களையும், தடைகளையும் உண்டுபண்ணுவது எப்படிப் புத்தியாகுமோ? தாய்மொழிகளில், அரசாங்கம் நடத்தப்படுவதற்குத் தாய்மொழிக்கல்வி விருத்தியடையவேண்டும். ஆகவே எல்லாக் கலைத்துறைகளிலும் தாராளமாகப் பாடபுத்தகங்கள் தாய்மொழியில்எழுதப்படல்வேண்டும். அரசினரின் ஆதரவு கிடைத்தாற்றான், இது விரைந்து கைகூடி நற்பயனை அளிக்கும். மேலும், இவ்வளவு காலமும் ஆசிரியர்கள், பாடபுத்தக விஷயத்தில் அனுபவித்து வந்த சுதந்திரத்தை, அரசினர் பறிக்க முயல்வதும் பெரிய தவறாகும். ஆகையால், இவ்விஷயத்திற் தாராளமாக நடந்தாற்றான், ஆசிரிய உலகத்தின் பொறுப்பும் பெருமையும் காப்பாற்றப் படும்.

## புதுமைப்பித்தன் நிதி

### கொழும்பில் ரூ. 3310

கொழும்பிலுள்ள இலக்கிய நண்பர்களாற் புதுமைப்பித்தன் நிதிக்கெனச் சேகரிக்கப்பட்ட தொகையிற் செலவு தள்ளி மிகுதியான தொகை ரூ. 3310—50 சென்னை வை. கோவிந்தன் அவர்களுக்கு நிதியாளர் திரு. ஆ. குருசுவாமி அவர்களால் சென்ற வாரம் அனுப்பி வைக்கப் பெற்றது. யாழ்ப்பாணத்திற் சேர்ந்த தொகையும் சென்னைக்கு அனுப்பி வைக்கப்படும்.

## இரு சகோதரர்

### துன்பவியல் நாடகம்

சாவகச்சேரி இந்துக்கல்லூரி நாடக சபையினரால் இரு சகோதரர் என்ற துன்பவியல் நாடகம் 14-6-52 சனிக்கிழமை இரவு 8 மணிக்குக் கல்லூரி மண்டபத்தில் டொக்டர் எஸ். சுப்பிரமணியம், ஓ. பி. ஈ., அவர்களின் தலைமையில் நடைபெறுமெனச் சபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## பாதை ஓரத்தில்

### பாட்டைசாரி

காலிமுக மைதானத்திற் சென்ற செவ்வாய்க்கிழமை கோப்பாய்ப் பிரதிநிதி திரு. வன்னியசிங்கமும் நெருப் பெடுத்திருக்கின்றார். அவருடைய பேச்சைப் பத்திரிகையிற் படிக்கும்போது யாழ்ப்பாணத் தொகுதிகளிற் செத்தவர்களும் தேர்தலின்போது வாக்களித்திருக்கின்றனர் என அறியக் கிடக்கின்றது. இதைக் கேட்ட பின்னர்தான் கல்கிசையில் அடக்கம் செய்வதற்கென எடுத்துச் செல்லப்பட்ட ஒரு பிரேதத்துக்கு வெயர்க்கத் தொடங்கியிருக்கவேண்டுமெனக் கொழும்பிலுள்ளவர்கள் பேசிக்கொள்ளுகின்றனராம்!

1947-ல் நடைபெற்ற பொதுத்தேர்தலின்போதும் யாழ்ப்பாணத் தொகுதிகளிற் செத்தவர்கள் நடமாடினார்கள் எனப் பேசப்பட்டது. அப்போது திரு. வன்னியசிங்கம் எந்தக்கட்சியின்சார்பிற்போட்டியிட்டாரோ அதேகட்சியினர்தானிந்த அதிசயத்தை செய்யக்கூடியவர்களெனப் பலர் நம்பினர். ஆகவே, திரு. வன்னியசிங்கம் அனுபவவாயிலாகத்தான் பேசுகின்றார் என எண்ணுவதா?

### முத்திரை இருந்ததா?

யாழ்ப்பாணத் தொகுதியொன்றில் வாக்களிக்கும் நிலையத்துக் கருகிலுள்ள தபாற்பெட்டிக்குள் வாக்குச் சீட்டுக்கள் போடப்பட்டிருந்ததாகத் திரு. வன்னியசிங்கம் தெரிவித்தார். வாக்குப்பெட்டிக்குள்ளே போடவேண்டிய கள்ளத்தனமான வாக்குச்சீட்டுக்களை ஒருசிலர் தபாற்பெட்டிக்குள் போட்டிருக்க வேண்டுமென அவர் கருதுகின்றார். தபாற் பெட்டிக்குள் வாக்குச்சீட்டுகளைப் போட்டவர்கள் அவற்றுக்குரிய முத்திரையையும் ஒட்டியிருந்தார்களோ என்பதை நான் அறிய விரும்புகின்றேன்.

### 'நாய்க் குடை'

மழைக்காலத்தில் முளைக்கும் காளான்களைப் பார்த்து 'நாய்க்குடை'கள் என்று கூறுவோருமுளர். தேர்தல் காலத்தில் தோன்றும் சுயேச்சையாளர்களையும் பிரிட்டன் போன்ற நாடுகளில் நாய்க்குடைகள் எனக் கூறுவதுண்டு. இங்கு நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற சுயேச்சையாளர்களிற் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அத்தனைபேரும் யூ. என். பி.க் கட்சி அங்கத்தினராகச் சேர்ந்து கொண்டனர். மன்னார்ப் பிரதிநிதி தனது தனிப்பண்பை இழக்காமல் அரசாங்கக் கட்சியுடன் இணைந்துள்ளார். இந்த நாய்க்குடைகளால் ஒரு பயனுமில்லையென்பதை அறிந்துதான் இவற்றைக் கடற்கரைத் தாழங்காய்கள் என்று அன்றொருவர் கூறினார் போலும்!

## எதிர்க்கட்சியினர் வயிற் ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காவுக்கு முதுகெலும்பே இல்லையெனக் குறிப்பிட்டிருந்தார். அதே பேர்வழிதான் இன்று இவர்களுக்கெல்லாம் தலைவராக விளங்குகின்றார்.

திரு. பண்டாரநாயகா காலிமுக மைதானக் கூட்டத்திற் பேசும்போது, "இந்தமாதிரியான தருணங்களில் எல்லாம் எவ்விதமான ஆதாரமுமற்ற குற்றங்களைக் கண்டுபிடிப்பதும், ஊர்ப் புகைச்சல்களைக் கிளப்பிவிடுவதும் மிகவும் இலகுவானதென"க் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அன்று பேசியவர்களிற் பலர் தேர்தலிலே தமது கட்சிகள் அடைந்த தோல்வியைப் பூசி மறைப்பதற்குக் கதைகளை அளந்து கொட்டினரேயன்றித் தேர்தலில் நடைபெற்ற பிழையான காரியங்களைத் தக்க ஆதாரங்களுடன் எடுத்துக் காட்ட முயலவில்லை.

தலைவர் பண்டாரநாயகா அவர்கள் தெரிவித்ததுபோல எதிர்க்கட்சியினரின் முறையற்ற தேர்தல் ஒழுங்குகளும் பிழையான பிரசாரங்களும் நாட்டிலே தப்பான அபிப்பிராயங்களை ஏற்படுத்தி வாக்காளர்களிடையே தடுமாற்றங்களை உண்டாக்கி விட்டன. ஆகவே அவர்கள் சனநாயக முறையைப் பின்பற்றியதற்காக எதிர்க்கட்சியினர் எரிந்து புகைய வேண்டியதேயில்லை.

இவர்கள் கூறும் ஊழல்கள் எவ்வளவு தூரம் உண்மையோ தெரியவில்லை. இவற்றையெல்லாம் விசாரணை செய்து மக்களின் சந்தேகங்களைத் தீர்த்து வைப்பதற்கு அரசினர் காலந் தாழ்த்தாது ஒரு விசாரணைச் சபையை ஏற்படுத்துவதே முறை.

## செத்தவரின் சக்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமது வாக்குகளை அளித்துள்ளனர். கிழக்கு மாகாணத்திலும் திருகோணமலையிலுமுள்ள பிரிட்டிஷ்கப்பற் சேனைத்தளத்தைச் சேர்ந்த பகுதிகளிலும் மக்கள் தங்கள் உரிமைகளைப் பிரயோகித்துள்ளனர். இவர்கள் அனைவரும் சோஷலிஸ்ட் தன்மை வாய்ந்த திரு. சேனநாயகாவின் யூ. என். பி. கட்சிக்கும் அதன் நண்பர்களுக்கும் 66 ஸ்தானங்களை அளித்திருக்கின்றனர்..."

இலங்கையின் புதிய பிரதமரைப்பற்றி அப் பத்திரிகை பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது: இளைய சேனநாயகா ஒரு பிரமச்சாரியாவார். அவருக்கு இப்போது நாற்பத்தொரு வயது. எப்போதும் சுங்கான் பிடித்துக்கொள்ளுவார், தகப்பனாரின் ஞாபகத்தை இவர் நினைவூட்டுவதற்கும் மேலாக, விவசாய மந்திரியாக இவர் இருந்த காலத்தில் வியக்கத்தக்க காரியங்களைச் செய்து முடித்தார்......

கடிதச் சுருக்கம்

## சமஷ்டி வகுப்புவாதமா?

தங்கள் பத்திரிகை மூலம் தமிழர் — சிங்களர் ஒற்றுமையை நிலைநாட்ட முயல்வது மெச்சத்தக்கதே. ஆனால் சமஷ்டி வாதிகள் இதற்குப் பங்கம்விளைக்கிறார்களென்று தாங்கள் கூறிக்கொள்வது முற்றிலும் தப்பான அபிப்பிராயம்என்பதே என்னுடைய தாழ்மையான கருத்தாகும். மேலும் தாங்கள் தமிழரசுக் கட்சிக்காரர்மீது சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் அத்தனையும் நியாயமற்றவையே.

தமிழர் — சிங்களர் ஒற்றுமையைத் தமிழரசுக் கட்சி ஒருபோதும் எதிர்த்தது கிடையாது மேலும் தமிழரசுக் கட்சிக்காரரை வகுப்புவாதிகள் என்று கூறுவது பிழையாகும். ஒரு கட்சி நசுக்கப்படும் இனத்தின் உயர்வுக்காகப் பாடுபட்டால் அது வகுப்புவாதமாகுமா?

.........

இன்று தமிழரசுக் கட்சி படுதோல்வி அடைந்திருப்பதுண்மை. அதற்குக் காரணமும் உண்டு. கல்விமான்களே, தமிழரசுக் கட்சியின் உண்மைக் கொள்கைகளை உணர முடியாத நிலையில் இருக்கும் பொழுது பாமர மக்கள் அதை எவ்விதம் அதி சீக்கிரத்தில் உணர முடியும்? இக் கடிதத்தைப் பிரசுரிப்பீர்களென நம்புகிறேன்.

க. ந. சிங்கம்

கொக்குவில்
10-6-52

## தேர்தல் விநோதம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்புசென்று தமது மருத்துவசாலையில் பழையபடிகடமை ஆரம்பித்து விட்டனர். என்றாலும் தமது கட்சியையும் அதன் பொறுப்பையும் மறக்கவில்லை. தமிழரசுக்கட்சி அங்கத்தினர் இருவர் அரசினருடனாவது வேறு கட்சிகளுடனாவது ஒருபோதும் சேர்ந்துழைக்க முற்படாராம். தனியாக நின்று ஒற்றையாட்சியை எதிர்த்துச் சமஷ்டி வேண்டி நிற்பார்களாம். இப்போது தமது கட்சி தோல்வியடையினும் கிராமங் கிராமமாகச் சென்று சமஷ்டி! சமஷ்டி!! என்று கூறித் தமிழரசு வெற்றிபெறச் செய்வது நிச்சயமாம். பேஷ்! (தொடரும்)

## தேகவியோகம்

### செல்வி க. இரத்தினம்

நீர்வேலி, சி. க. வேலாயுத பிள்ளை அவர்களின் இளைய சகோதரியும் திருநெல்வேலி சைவ மகளிர் இல்லத்தில் இருந்து முத்துத்தம்பி வித்தியாசாலையிற் பயின்றவருமான செல்வி க. இரத்தினம் தமது 22-வது வயதில் சென்ற 2-6-52 திங்கள் மாலை இவ்வுலகவாழ்வை நீத்துச் சிவபதம் அடைந்தார். அவரது ஆத்மா சாந்தி அடைவதாக.


1952 ஞூல் 5-ம் வகுப்புப் பரீட்சைக்குரிய

மாதிரி வினாப் பத்திரங்கள்

ஆங்கிலம்

[Model Question Papers in English]

11 வினாப் பத்திரங்கள்—ஒவ்வொரு பத்திரமும் வினாக்கள் பலவற்றைக் கொண்டது — ஒவ்வொரு வினாவுக்கும் விடையெழுதுவதற்கேற்ற இடவசதியுண்டு. 8 அங்குல × 6½ அங்குல அளவில் 32 பக்கங்கள் கொண்ட

தனிப் புத்தகம்

விலை சதம் -/60 :: தபாற் செலவு பிரத்தியேகம்

தொகையாக வாங்குபவர்களுக்குத் தகுந்த கழிவு கொடுக்கப்படும்.

சுன்னாகம்: தனலக்ஷ்மி புத்தகசாலை

# உணவுப் பங்கீடு முறை சென்னையில் நீக்கப்பட்டது

யுத்தகாலந்தொட்டு அதாவது சென்ற ஒன்பது வருடங்களாகச் சென்னை மாகாணம் கைக்கொண்டு வந்த உணவுப் பங்கீடுமுறை சென்ற 6-6-52 தொடக்கம் நிற்பாட்டப்பட்டுளது. உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்ட காலத்திலிருந்து இம்முறை நீடித்து நடைபெற்று வருவதை எவரும் விரும்பவில்லை. இந்தியா எங்கணும் பங்கீடுமுறை நிலைபெற்று வரச் சென்னையரசினர் மிக்க துணிவுடன் கட்டுப்பாட்டினை நீக்கியது வியக்கத்தக்கதே. சென்னைப் பிரதமர் திரு. இராஜகோபாலாச்சாரியாரின் திரச்செயலைப் புகழாதார் இல்லை. உணவுப் பங்கீடும் கட்டுப்பாடும் நீங்கியதால் மறுபடி உணவுக் கஷ்டம், உணவு விலையேற்றும் என்பன ஏற்படுமோவென்று சிலர் அஞ்சுகின்றனர். கள்ளச் சந்தை பழையபடி தலைகாட்டுமோவெனவும் சிலர் ஆலோசிக்கின்றனர். போதிய உணவுப் பொருள்களை வைத்துக்கொண்டே உணவுப் பங்கீட்டினைச் சென்னையரசினர் நீக்கினர். அரசினருடன் வியாபாரிகளும் பொதுமக்களும் ஒத்து உழைப்பின் சென்னையரசினரின் அரிய செயலால் நிச்சயம் நன்மையுண்டாகும்.

### நம்பிக்கையும் துணிவும்

சென்னைப் பிரதமர் நம்பிக்கையுடனும் துணிவுடனும் செய்த இந்த உணவுப் பங்கீட்டு விஷயம் சித்தியடைய வேண்டின் எவரும் இனிமேல் அரிசி நெல் முதலியவற்றை நினைத்தபடி வாங்கி விற்கலாம். எவ்வித கட்டுப்பாடுங் கிடையாது. தம்மிடமிருக்கும் மிகுதி உணவுப்பொருள்களையாவரும்நியாயமான விலைக்கு விற்க நன்னோக்கத்துடன் முன்வர வேண்டும். ஒளித்துச் சேமித்து வைப்பதாயின் உணவுத் தட்டுப்பாடு மறுபடி ஏற்படக்கூடும். எவரும் நினைக்காத முறையிலே தமது கொள்கை சித்தியடையுமென்ற துணிவும் பொது மக்கள் தம்முடன் ஒத்துழைத்துச் சித்தியடையச் செய்வர் என்ற நம்பிக்கையும் இராஜாஜிக்கு உண்டு.

### சீன கலாசாரத் தூது

இந்திய அரசினர் ஆதரவில் சீனத்துக்கு அனுப்பப்பட்ட தூதுக்கோஷ்டியினர் ஒன்பது வாரங்களாக அங்கு தங்கிப் பலவிடங்களையும், கலாசார ஸ்தாபனங்களையும், கல்விச் செல்வர்களையும் தலைவர்களையும் சந்தித்துவிட்டு இந்தியா திரும்பிவிட்டனர். இக்கோஷ்டியின் தலைவர் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிதராவார். சீன மக்கள் தமக்களித்த பெரிய உபசரணையைப் பலபடப் புகழ்ந்து பேசினர். புதிய சீனத்திலே தலைவர்களும் பொதுமக்களும் தமது நாட்டின் விருத்தியை நாடிக் கைக்கொள்ளும் புனருத்தாரணத் தொண்டுகளைப் பாராட்டிப் புகழ்ந்து பேசினர். எவ்விதத்திலும் தமது நாட்டினை முன்னுக்குக் கொண்டுவரவேண்டுமென்ற அபாரசக்தியுடன் எங்கு பார்த்தாலும் சீன மக்கள் பலதுறைகளிலும் பணியாற்றி வருகின்றனர். இந்தியாவுக்கும் சீனுவுக்குமிடையில் உள்ள புராதன தொடர்பு மேன்மேலும் உறுதியடைய வேண்டு-

## இந்தியா

மென்று சீன மக்கள் மிக உருக்கமாகப் பேசினராம். எத்தனையோ பழக்க வழக்கங்கள், ஆசாரங்கள், கலாசாரங்கள் இந்தியாவுக்கும் சீனத்துக்குமிடையில் ஒற்றுமையுடையனவாகக் காணப்படுகின்றன. சீன மக்கள் இந்தியரைத் தமது உறவினராகவே கருதுகின்றனர்.

### ஆந்திர மாகாணம்

ஆந்திரமாகாணம் எப்படியும் விரைந்து உருப்படுவது நிச்சயம். இம்மாகாணம் ஏற்படுத்தும்படி முனைந்து நிற்கும் ஒரு கட்சியினர் இந்திய அரசினர்க்கு அளவுகடந்த நெருக்கடியை உண்டாக்குகின்றனர் சுவாமி சீதாராம் அவர்கள் மறுபடி உண்ணாவிரதம் ஆரம்பித்துவிட்டனர். இது மூன்றும்முறையாகும். ஆந்திர மாகாணம் ஏற்படும்வரையும் உண்பதில்லையாம். விரதம் ஆரம்பித்து இரு வாரங்களாகின்றன. இவர் நிலை மிக்க கேவலகதியை அடைந்துவிட்டது. பிரதமர் நேரு இவருக்குச் செய்தி அனுப்பியும் இவர் கவனிப்பதாகக் காணேம்.

## இசை அரங்கு

உடுவில் இசைத்தமிழ் நிலயத்தின் இசை அரங்கு 8 - 6 - 52 மாலை நடைபெற்றது.

திரு. ஏ. ஜி. ஐயாக்கண்ணு தேசிகர் அவர்கள் பாடினார்கள். ஆரம்பத்தில் இவரது சாரீரம் வெகு சிரமப்பட்டது. பின்பு, படிப்படியாகத் தெளிவாகிக் காகரப்பிரியா ஆலாபனையின்போது வசதியளித்தது. இந்த இராகம் பாடிய பாணி நன்கமைந்தது. பொதுவாகக் கச்சேரி பின்னடியிற்றான் களைகட்டிச் சோபித்தது. பக்கவாத்தியம்வாசித்த திரு. எஸ். சோமாஸ்கந்த சர்மா அவர்களும் பாடகருக்குஇடைஞ்சல்இல்லாத முறையில் வயலின் வாசித்தார். இவரது வாசிப்பில் முன்னேற்றத்திற்குரிய அம்சங்கள் காணப்படுகின்றன.

மிருதங்கம் வாசித்த திரு. ஏ. கணேசசர்மா அவர்களின் வாசிப்பும் நன்கமைந்திருந்தது.

திரு. என். சண்முகரத்தினம் அவர்கள் கஞ்சிரா வாசித்தார். மிருதங்கமும் கஞ்சிராவும் தனி ஆவர்த்தத்தில்மிகவும்நன்ருயிருந்தது.

திரு. ரீ. இராமச்சந்திர ஐயர் அவர்களின் நன்றியுரையுடன் கச்சேரி நிறைவேறியது.

## வித்தியாவிருத்திப் பணம் பெறும் மாணவி

### மறவன்புலோவில் உபசாரம்

மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாசாலையிற் கல்வி கற்று இவ்வாண்டு வித்தியாவிருத்திப் பணம் பெற்று அரசினர் மத்திய கல்லூரிக்குக் கல்வி பயிலச் செல்லும் மாணவி க. நாகம்மாவுக்குச் சமீபத்தில் சகலகலாவல்லி வித்தியாசாலையில் தலைமை ஆசிரியர் திரு. நா. பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அன்பளிப்பாக அம்மாணவிக்குச் சில புஸ்தகங்கள் வழங்கப்பட்டன. —கடிதம்.

## நமது வாசிகசாலை

**தமிழ் சிங்கள சம சொற்கள்:** ஆசிரியர்: உணவட்டுனே சுவாமி குணரத்ன, [ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னுகம்] பிரசுரம்: எஸ். ரீ. சின்னத்துரை, அதிபர், லீலா ஸ்டோர்ஸ், 249, நொறிஸ் வீதி, கொழும்பு; விலை: ரூ.1-00

இலங்கை சுதந்திரம் பெற்றபின்னர் தாய்மொழிகளே அரசாங்க மொழிகளாகவேண்டுமென அரசினர் முடிவுசெய்துள்ளார். எனவே தமிழ் சிங்களமாகிய இருமொழிகளையும் இலங்கை மக்கள் ஊக்கத்துடன் நன்கு கற்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுளது. இத்தருணத்தில் இம்மொழிகளை இனிது கற்றற்கு ஏற்ப நூல்களும் இன்றியமையாதனவாகின்றன.

இதனையுணர்ந்து சுவாமி குணரத்ன அவர்கள் வேண்டிய வேண்டிய நூல்களை எழுதி வெளியிட முன்வந்தது போற்றப்படவேண்டிய விஷயம். முன்னர் சுவாமி அவர்கள் எழுதி வெளியிட்ட சம்பாஷணைச் சிங்களம் ஆசிரியர்களதும் மாணவர்களதும் தாராளமான வரவேற்பைப்பெற்றது பெரிதும் புகழ்ந்து பாராட்டப்பட வேண்டிய விஷயம்.

பூர்வீக காலந்தொடக்கம் இலங்கையிற் பாவனையிலிருந்து வரும் தமிழ் சிங்களம் ஆகிய இருமொழிகளும் நெருங்கிய தொடர்புடையன. தமிழிலிருந்து சிங்களத்துக்கும், சிங்களத்திலிருந்து தமிழுக்கும் வந்து இலக்கியத்திலும் கிராமியத்திலும் உபயோகிக்கப்படும் ஆயிரஞ் சொற்களுக்குமேல் அகராதி முறையில் இந்நூலின்கண் எடுத்து ஆளப்பட்டுள்ளன. அத்துடன் தமிழ் சிங்கள நெடுங்கணக்கு எழுத்துக்களும், முறையே அவைகட்கு சிங்களத்திலும் தமிழிலும் உச்சரிப்புக்களும் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

சிங்கள மொழியிலுள்ள சில எழுத்துக்கட்குச் சம எழுத்துக்கள் தமிழிற் கிடையா. அவைகளின் உச்சரிப்புவிதியும் ஆங்கில உதாரணங்களுடன் இந்நூலில் எடுத்துக்காட்டப்பட்டிருப்பது கற்போருக்குமிகஉதவியாகும்என்பதிற்சந்தேகமில்லை.

இவ்வரிய நூலை மிக்க பிரயாசத்துடன் சிறந்த முறையில் எழுதியுள்ள சுவாமி குணரத்தின அவர்கட்கு யாவரும் கடமைப்பட்டுள்ளார். இவர் முன்னர் எழுதி வெளியிட்ட நூல்களை நன்கு மதித்து ஏற்றதுபோல் இச்சிறு நூலையும் வித்தியாசாலை ஆசிரியர்களும், மாணவர்களும், மற்றையோர்களும் புதுவிருந்தாகக் கொண்டு பயன்படுத்திக் கொள்வாரென்பது எமது அபிப்பிராயம். அப்போதுதான் மேற்படி சுவாமியவர்கள் மேன்மேலும் புதிய பாட புத்தகங்களை எழுதி வெளியிடத் தூண்டப்படுவர். இந்நூலைச் சீரியமுறையில் அழகாக அச்சிட்டு வெளிப்படுத்திய கொழும்பு நியூலீலா அச்சியந்திரசாலை அதிபர் திரு. எஸ். ரீ சின்னத்துரையவர்கள் ஊக்கமும் உதவியும் பாராட்டப்பட வேண்டியன.

●

**பேசும் படம் மலர் 1952:** ஆசிரியர்: டி. வி. ராம்நாத்; பிரசுரம்: பேசும்படம் காரியாலயம், சென்னை 14; விலை: ரூபாய் 5-0-0

பத்திரிகைகள் விசேஷ மலர்களைத் தயாரிக்கும்போது விளம்பரங்களைப் போதியளவு பெறுவதற்குத் திட்டமிடுவதுவழக்கம். ஆனல் ஆசிரியர் ராம்நாத் அவர்கள் பேசும் படம் மலர் வாசகர்களின் கையில் பத்திரமாக இருக்க வேண்டுமென்பதையும் உணர்ந்து உயர்ந்த முறையிற் கலிக்கோ கட்டுடன் மலரைத் தயாரித்துள்ளார். அழகு ததும்பும் படங்களுடனும் சினிமா இரசிகர்களுக்கு மகிழ்ச்சியூட்டுங் கட்டுரைகள், கதைகளுடனும் மலர் பொலிந்து விளங்குகின்றது.

இந்தியாவிற் சினிமாத் தொழில் இன்று மிக முக்கிய ஸ்தானம் வகித்துள்ளது. அதன் முன்னேற்றத்தைச் சித்திரங்களுடன் படம் பிடித்துக் காட்டுகின்றது இம் மலர். இதன் அமைப்பும் சித்திரக் குவியலும் செம்மையான அச்சும் ஆசிரியரின் கலை ஆர்வத்தை நன்கு பிரதிபலித்துக் காட்டுகின்றன.

●

**இலங்கைப் புலவர்கள்:** பிரசுரம்: ஒற்றுமை நிலையம், வியாசராவ் தெரு, சென்னை 17. விலை: அணு 8

இலங்கைப் புலவர்கள் என்ற வரிசையிற் சிலமாதங்களுக்கு முன்னர் சென்னை வானெலியிற் பேரறிஞர்கள் பலர் பேச்சுக்கள் நிகழ்த்தினர். ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை, கனகசபைப்பிள்ளை என்பவர்களைப்பற்றி முறையே பேரறிஞர்களான டி. பி. மீனுட்சிசுந்தரம்பிள்ளை, ஆர். பி. சேதுப்பிள்ளை, ஏ. எம். பரமசிவானந்தம் என்போர் இரத்தினச் சுருக்கமாகப் பேசியுள்ளனர் இச் சிறு நூல் அப் பேச்சுக்களின் தொகுப்பாகும். ஒற்றுமை நிலையத்தாரின் இச் சீரிய முயற்சியைப் பெரிதும் பாராட்டுகின்ருேம்.




# பாராளுமன்றத் திறப்பு விழா

## காலிமுக மைதானத்தில் மக்கள் குரல்

12-6-52.

ஜனப்பிரதிநிதிகள் சபைக் கட்டடத்துச் சபாமண்டபத்தில் இலங்கையின் இரண்டாவது பாராளுமன்றத்தைச் செவ்வாய்க்கிழமை காலை பிரதம தேசாதிபதி சோல்பரிப் பிரபு வழக்கமான சம்பிரதாயச் சடங்குகளுடன் திறந்து வைத்தார். கௌரவ திரு. டட்லி சேனநாயகாபிரதமமந்திரிப்பதவி ஏற்றபின் முதன்முதலாக இம்முறைதான் இந்த வைபவத்திற் கலந்துகொண்டார். சென்ற முறை இவருடைய தந்தையார் இவ்வைபவத்திற் பிரதமராக விருந்து கலந்துகொண்டார். இருசபை அங்கத்தவர்களும், பலநாட்டு ஸ்தானிகர்களும், நீதியரசர்களும், பகுதி அதிகாரிகளும், பிரபல்ய கனவான்களும் சமூகமளித்தனர். வழக்கம்போல எதிர்க்கட்சியினர் பெரும்பாலார். வரவில்லை இராணிமாளிகையிலிருந்து சனப்பிரதிநிதி சபைக் கட்டடம்வரை தெருவினிரு மருங்கிலும் இராணுவப் படைவீரர் அணிவகுத்து நின்றனர். பிரதமதேசாதிபதி வருவதற்குச் சிறிது முன்பாகச் சோனுவாரி மழை பெய்தது. அரசாங்க சினிமாப் பகுதி வைபவம் முழுவதையும் படம்பிடித்தது.

### சிம்மாசனப் பிரசங்கம்

பிரபு சோல்பெரி, தமது பிரசங்கதில் இந்நாட்டில் ஜனநாயக அரசாங்கம் தொடர்ந்து நடைபெறுவதையும், சட்டம் ஒழுங்கு முதலியன நடைபெறுவதையுமே மக்கள் விரும்புகிறுர்கள் என்பதைப் பொதுத் தேர்தல் முடிபுகள் திட்டவட்டமாக நிருபித்துவிட்டன என எமது அரசாங்கம் கருதுகிறது" எனக்கூறினுர். ஐக்கிய நாடுகள் இந்நாட்டுக்கும் ஏற்ற உதவி அளிக்குமெனக் குறிப்பிட்டபின், உள்நாட்டுநிதிநிலைமையை விளக்கினுர். உள்நாட்டு உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்குச் சகல முயற்சிகளும் எடுக்கப்படும். அடுத்த நிதி வருடத்தின் முடிவுக்குள் ஏறக்குறைய 5000 விவசாயக் குடும்பங்கள் கல்லோயாப் பள்ளத்தாக்கில் குடியேற்றப்படும். வரண்டபிரதேசங்களில் விவசாய அபிவிருத்திக்கு நீர்ப்பாசன வசதிகள் செய்து கொடுக்கப்படும். வர்த்தகத்திலும் கைத்தொழிலிலும் அதிக முன்னேற்றம் காணப்படும். கீழ்நாட்டுச் சங்கீத நடன பாடசாலை யொன்று சமீபத்தில் ஆரம்பிக்கப்படும். குடிசைக் கைத்தொழிலிற் கிராமவாசிகளுக்குப் பயிற்சியளிக்க நிலையங்கள் நிறுவப்படும். கொழும்புத் துறைமுக அபிவிருத்தித்திட்டம்திருப்திகரமாக முன்னேற்றமடைந்து வருகின்றது. சமூக சேவை மேலும் அபிவிருத்தி செய்யப்படும். ஆயுர்வேத வைத்திய அபிவிருத்திக்கு அதிக பணம் செலவிடப்படும். தேசியபாஷை விசாரணைச்சபைச்சிபார்சுகளும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும். இவ்வாறு தமது சிம்மாசனப் பிரசங்கத்தில் முக்கியமான அம்சங்களைக் குறிப்பிட்டார்.

### மாபெருங் கூட்டம்

செவ்வாய்க்கிழமை காலை சனப்பிரதிநிதிகள் சபையினைப் பிரதம தேசாதிபதி திறந்து வைத்தார். ஆனல் அன்று சாயந்தரம் அக் கட்டடத்துக்கு அருகிலுள்ள காலிமுக மைதானத்தில் மிகப் பாரிய கூட்டம் ஒன்று நடைபெற்றது. இந்த இடத்திலே இதுவரை நடைபெற்ற அரசியற் கூட்டங்களுள் இதுதான் மிக மிகப் பெரியதெனப் பலர் கூறுகின்றனர். அரசாங்கப் பொதுத் தேர்தல் நியாயவிரோதமான முறைகளில் நடந்ததென எதிர்க்கட்சித் தலைவர்கள் குற்றஞ்சாட்டினர். திரு. பீட்டர் கெனமன் பேசுகையில் தோட்டங்களிலுள்ள தமிழ்த் தொழிலாளர்களின் வாக்குரிமையை ஐக்கிய தேசியக் கட்சி பறிமுதல் செய்தது மனித சமூக தர்மத்துக்கு விரோதமானதெனக் குறிப்பிட்டார். திரு. பண்டாரநாயகா கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் சமீபத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் பல ஊழல்கள் இருப்பதாகச் சொல்லப்படுவதை விசாரிக்க ஒரு விசாரணைச் சபையை நியமிக்கும்படி வற்புறுத்திஞர். பின்னர் டொக்டர் என். எம். பெரேரா, திரு. ஸி. சுந்தரலிங்கம், திரு. சி. வன்னியசிங்கம், ஸ்ரீமதி குசுமா குணவர்த்தன ஆதியோர் பொதுத்தேர்தல் ஊழல்களைப்பற்றிக் கண்டித்துப் பேசினுர்கள். கூட்டம் முடிந்து சென்ற சனங்கள் பஸ் வண்டிகளுக்கு மிகுந்த இடர் விளைத்தனர்.

### பாராளுமன்றம்

புதிய பாராளுமன்றம் தனது சபாநாயகரைத் தெரிவு செய்வதற்காகத் திங்கட்கிழமை காலை கூடியது. திரு. அல்பேட் பீரிஸ் சபாநாயகராகவும், ஜனப் ஏ. எஸ். இஸ்மெயில் உப சபாநாயகராகவும் தெரிவு செய்யப்பட்டனர். இந்தப் பதவிகளுக்கு வேறு பெயர்கள் பிரேரிக்கப்படவில்லை. நிர்வாக சபைகளின் தலைவராக திரு. எம். டபிள்யு. ஆர். டீ சில்வா தெரி[illegible] செய்யப்பட்டார் எதிர்க்க[illegible] தலைவராக திரு. எஸ். ட[illegible] ஆர். டி. பண்டாரநாய[illegible]ரியப்பட்டார்.

## புதிய நூல்கள்


(1) இலங்கைப் புலவர்கள் அணு. 8. (2) தமிழ்த்தொண்டர்கள் ரூ. 1. (3) இலக்கியப் பொழில் ரூ.½. (4) விஞ்ஞானத் தொண்டர்கள் ரூ. 1. (5) சிலப்பதிகார நூல் நயம் ரூ. 2¼. (6) இராமலிங்க சுவாமிகள் திருவருட்பா ஆராய்ச்சி ரூ 2. (7) கம்பர் அகராதி ரூ. 6. (8) தமிழ் இங்கிலிஷ் அகராதி ரூ. 15. (9) சிலப்பதிகார வாசகம் அ. 8. (10) தமிழ்நாட்டு நவமணிகள் ரூ. 1. (11) சிலப்பதிகாரக் கதை அ. 10. (12) விஞ்ஞானப் பெரியார் ரூ. 3¾. விரிவான விலைப்பட்டியல் இனும்.

ஒற்றுமை ஆபீஸ், தியாகராய நகர், மதராஸ் 17

# சஞ்சலம்

★

இ. அம்பிகைபாகன்

"அம்மா! இன்று சினிமாவுக்குப் போகிறேன். நடராஜனும் சரோஜாவும் கூட வருகிறார்கள். ஒன்பதரை மணியளவில் திரும்புவேன். நீங்கள் வீணாகக் கண்விழித்துக் காத்திருக்க வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டே வெளியேசென்றேன். ஆனால், வாசலில் நான் சென்றபொழுது, அம்மா தனக்குள்ளே ஏதோ பேசியது என் காதில் விழுந்தது.

"யார் யார் எது விரும்பினாலும் செய்து கொள்ளலாம். நான் தனியே எப்பாடுபட்டாலுஞ் சரி. காலமே ஐந்து மணிதொடங்கி இரவும் பத்து மணிவரை என்பாடு ஓயாத வேலை. இது என் தலை எழுத்து......"

இப்படி வேறும் ஏதேதோ வெல்லாம் பேசித்தான் என்னையும்நொந்துகொண்டாளோ, என்னவோ, என் மனம், என்னை நிறுத்தியது. அப்படியே நின்றுகொண்டேன். கால்கள் அசைய மறுத்தன. உள்ளம் பொங்கியது. 'அப்பாவிடஞ் சொல்லிச் செய்ய வேண்டிய விஷயத்திற்கு என்னை ஏன் தன்மனதுள்ளே வையவேண்டும்? நானுஞ் சென்று சமையல் செய்ய வேண்டுமா, என்ன?' என்று துடித்தது.

ஆனால், மறுகணம் என் மனம் மாறியது. 'பெற்றவள் தனது கஷ்டங்களையும் ஓயாத வேலைகளையும் எண்ணிக் கவலைப்படும்போது, நான் ஏன் கோபங் கொள்ள வேண்டும்? அவரவர் கஷ்டம் அவரவருக்கல்லவா விளங்கும்; வேதனையாக இருக்கும்?' இப்படி அநுதாபப்பட்டது என்மனம்.

திரும்பி, அம்மாவிடஞ் சென்றேன். என்னை அவள் காணவில்லை. தனது சேலையின் தலைப்பால், கண்களைத் துடைத்தவண்ணம் ஏதோ வேலையில் கண்ணுங் கருத்துமாக இருந்தாள்.

'இப்போது பேசி ஏன் வீண் மனஸ்தாபத்தை உண்டாக்குவான்? பேசாமல், திரும்பிவிடுவோமா?' என்று ஒருகணம் எண்ணினேன். ஆனால், என்னையும் அறியாமல "அம்மா" என்று துடித்தன உதடுகள்.

அவள் நிமிர்ந்து என்னை ஒருமுறை பார்த்தாள். பின்பு தனது வேலையிற் கவனஞ் செலுத்தினாள். என்னை ஏன் என்றுங் கேட்கவில்லை.

இது விஷயம் என் மனதைப் பலமாகத் தாக்கியது. ஆனாலும், கவலையை—ஏமாற்றத்தை—அவ்வளவாகவெளிக் காட்ட நான் இஷ்டப்படவில்லை. அவள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில், மேலும் கஷ்டப்படுத்துவதா? என்று என் மனதை அடக்கிக்கொண்டேன்.

"பின்பு ஏன் நிற்கிறாய்? எங்கேயோ போவதாகச் சொன்னாய்........." என்றாள் அம்மா.

"ஆம், ஆனால் என்னை ஏன் வீணாக நோகிறீர்கள். உங்களது கஷ்டங்களை அப்பாவிடஞ் சொலலாது, என்னுடன் ஏன கோபிக்க வேண்டும்? உங்களுளளே நீங்களாக, மனதுடன மனதாக வைத்திருத்தால்......" என்று மெள்ள ஆரம்பித்தேன்.

"என்ன, 'மனதுடன் மன' என்கிறாய்? இன்னும் தேகவலிமை உள்ள இல்லாவிட்டால், என்லோரும் என்னைப்போலத் தான் கஷ்டப்படுகிறார்களா? ...... மீனாக்ஷி அம்மாள், சீதாலக்ஷ்மி...... எல்லாரும் எவ்வளவு சுகமாக, கவலையில்லாமல்......... அதையெல்லாம் ஏன்? இது என் விதி. பாழ்பட்ட யமன்கூட என்னிடம் வரப்பஞ்சிப்படுகிறான்! பச்சைப் பாலன்களையும் பணக்காரர்களையும் பதைபதைக்கச் செய்யும் யமன்; என்னைமட்டும் தேடாமல் திரிகிறான்."

இதற்குமேல், அவளால் பேச இயலவில்லை. குரல் கம்மியது. சிறு குழந்தையைப் போல விம்மிப் பொருமினாள். சேலைத் தலைப்பால், பின்பும் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

என் கண்களுங் கலங்கின. மேலும் அதிலே என்னால் நிற்கச் சகிக்கவில்லை. அவ்விடத்தைவிட்டு அகன்று, நடராஜன் வீட்டை நோக்கிச் சென்றேன்.

* * * *

மீனாக்ஷி அம்மாள், இராஜின் தாய். அவள் ஒரு 'ஸோபா'வில் சாய்ந்து, நிம்மதியாக இருந்தாள். எனது தாய் இருந்த நிலைக்கும், இராஜின் தாய் இருந்த நிலைக்குமிருந்த வேறுபாட்டை எண்ணி எண்ணி என் நெஞ்சம்நொந்தது. வழிவழியே வெந்து வெடித்துக்கொண்டிருந்த எனது மனதை, பன்மடங்கு மோசமாக்கியது, அந்தக் காட்சி.

அம்மாவின் மன வேதனைக்கு, ஓர் எல்லைபோட்டே ஆகவேண்டும் என்று என் உள்ளம் சொல்லியது. என்னை நொந்து பெற்று வளர்த்தவளது மனச் சாந்தியைப்பெறுவதே எனது முதற் கடமை என்று தோன்றியது. அவளது நிலை, என் நெஞ்சைப் பிழந்தது. மழை, வெயில் என்னும் வித்தியாசமின்றிப் பகல் இரவென்ற வேறுபாடு இன்றி, உடம்பைக் கசக்கி மாடுபோல வேலை செய்யும் அம்மாவை எண்ணித் துடித்தது என்மனம்.

"ஏன், தம்பி, உள்ளே போய் இருந்து கொள்ளும். இராசு இப்போது வந்துவிடுவான்" என்றாள் மீனாக்ஷி.

நான் உள்ளே சென்றேன். "அண்ணா இப்போது வந்துவிடுவார், இருங்கள்." என்று உபசரித்த ஸரோஜா, என்னுடன் பேச நேரமின்றித் தனது கருமமே, இல்லை கவலையே கண்ணாயிருந்தாள். ஆம், எத்தனையோ விதவிதமான பட்டாடைகளை வைத்து 'எதை அணிவது?' என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள், அவள்.

இயற்கையிலேயே அவள் அழகி. புன்னகை மலர்ந்த முகம். இவற்றுடன் அழகு மலரும் வயசு. அவளுக்குப் பதினாறு வயசு முடிவடைந்திருந்தது. தன்வசமிருந்த பட்டுடைகளைப் பார்த்துப் பார்த்துப் பூரித்த அவளது உள்ளத்தின் மலர்ச்சி முகத்திற் படிந்தது. இவையெல்லாம், என்னை மயக்கின. அவளது அழகையே பருகிப் பருகி, அகம் மகிழ்ந்து கொண்டு, எவ்வளவு நேரந்தான் மயங்கி இருந்தேனோ தெரியாது!

"அம்மா! இது நல்லதா? இதுவா நல்லது?......"
என்று பாவாடைகளைக் கையில் வைத்துக்கொண்டு முடிவுக்கு வர இயலாது ஸரோ தவித்தாள். ஆனால், மீனாக்ஷி அம்மாள் விடை கொடுக்கவில்லை. தனது மகளின் அதிருஷ்டத்தை எண்ணியோ தனது மகளின் அழகில் மயங்கியோ, ஏதோ.

"ஏன், அம்மா! சொல்லேன்........." என்றாள் ஸரோ.

"எனக் கென்ன தெரியும். அதோ இருக்கிறார் அத்தான். அவரைத்தான் கேளேன்" என்றவள் என்னையும் திரும்பிப் பார்த்தாள். நான் ஸரோவை வைத்த கண் வாங்காமல் பார்த்ததை அவள் கண்டாளோ, என்னவோ.

ஸரோவின் தலை, தானாகவே கவிழ்ந்தது.

"ஸரோ அம்மாவுக்கு அந்த நீலப் பாவாடை தான் நல்லது!"

எனது செவிகளையே என்னால் நம்பமுடியவில்லை. உண்மையிலே இவ்வார்த்தைகள் என் காதில் விழுந்தனவா, அல்லது வீண் பிரமையா? என்று தயங்கினேன். ஒருவேளை நான்தான், என்னையும் அறியாமல் சொல்லிவிட்டேனோ? என்றுகூட அஞ்சினேன். ஆனால், திரும்பிப் பார்த்த பொழுது....... என் அச்சமெல்லாம் மறைந்தன?

அருகே இருந்த ஜன்னலினூடாகப் பார்த்தன இரு கண்கள். ஆம். ஒரு பெண்தான் அவ்விடத்திற் காணப்பட்டாள். அவள் ஸரோவின் பராயத்தவள். ஆனால் மேலும் அழுக்குப் படிய இயலாத உடையுடன், இன்னும் வரண்டு சுருள இடமில்லாத தலைமயிருடன், மேலும் சோகம் படர இயலாத முகத்துடன்......... அவள் காணப்பட்டாள். இளமையின் சோபையும், வறுமையின் தழும்பும் அவளை ஒரு தனி அழகுடன் விளங்கச் செய்தன. இல்லை. இயற்கை அழகு அவளுக்கு எவ்வளவோ உண்டு என்பது, அந்த நிலையிலும் பளிச்சென்று இருந்தது.

"லட்சுமி! வேறு வேலை ஒன்றுமே இல்லையா உனக்கு? இந்தா, இப்போது இராசு வந்துவிடுவான்! மூன்று பேரும் போகவேண்டும். கோப்பி போடு. அதற்குமுன் வாளியிலே தண்ணீர் ஊற்றிவிடு. சரோஜா கிணற்றில் அள்ளமாட்டாள்......."

இப்படி எதை எதை எல்லாமோ சொல்லிக் கட்டளையிட்டுக்கொண்டே போனாள் மீனாக்ஷி. மறுபேச்சுப் பேச இயலாதவளாய், லக்ஷ்மி அகன்றாள். ஆனால், என் அகக்கண்ணில், அவள் அதே கோலத்தில் தோன்றினாள்.

லக்ஷ்மி! அவள் ஏழைதான். இவ்வளவு கஷ்டத்திற்கும் அதுவே காரணம்! ஸரோவும் அவளது பராயத்தவள்தானே. ஆனால், ஒரு வாளி தண்ணீர் அள்ளக்கூட, லக்ஷ்மி! ஸரோஜா அள்ளக் கூடாது! ஸரோஜாவுக்கு வேண்டிய எவ் வேலையும் லக்ஷ்மியால் ஆகவேண்டும். பாவம், இதை அவள் சிந்திப்பதில்லையா? கவலைப்படுவதில்லையா?

"என்ன செய்வது? வாழவேண்டுமாயின், இதை எல்லாம் அவள் அனுபவித்தே தீரவேண்டும். இது இவளது விஷயத்தில் மட்டுமல்ல. ஏழைகளின் கதையே இப்படித்தான்.

"பாவம், லக்ஷ்மி. ஒரே வயசான ஸரோவுடன் வாழ்ந்து, இருவிதமான வாழ்க்கைகளை நேரே கண்டு, அநுபவித்துத் துயரப் படுகின்றாளே. இதுகூட இறைவனின் செயலா? இறைவன் முன்னிலையில் எவருஞ் சமம் என்றால், என் கண்முன் நிற்பதென்ன?

"தனிமையில் வாழ்ந்து தனது ஏழ்மையை எண்ணி வருந்தினால், அது அவ்வளவு கவலைக்குரிய, மனதைப் பாதிக்கக்கூடிய, விஷயமல்ல. ஆனால் .......நிலைமையின் வேறுபாட்டை, பிறப்பின் குறையை, ஏழ்மையை, அடிமை வாழ்க்கையைக் கண்முன் அநுபவித்து, கவலையில்லாதிருப்பது எப்படி? பார்ப்பவனுக்கே இப்படி இருந்தால், அநுபவிப்பவனுக்கு எவ்வளவாக இருக்கும்?

"மனதில் எழும் புரட்சி எண்ணங்கள், புது உணர்ச்சிகள் எல்லாம் அநுபவம் முதிர்ந்தவர்களின் மனதை விட்டு உதிர்ந்துவிடுமென்பது ஏதோ உண்மையாக இருக்

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க






அன்பான மருமக்களே !

சென்ற வாரம் வெந்நீர் பருகும் பழக்கத்தைப் பற்றி எழுதியிருந்தேன் அல்லவா? அதைப் படித்து விட்டு மருகன் ந. சிவபாதம் எழுதியுள்ளதை இங்கே கவனியுங்கள். "தங்களின் ஒரு கோப்பை வெந்நீர் பருகும் பழக்கத்தைப் படித்தேன். யான் மூன்று வருட காலமாக தேநீர் கோப்பி குடிப்பது கிடையாது.......... தினம் மூன்று வேளை வெந்நீர் குடிப்பேன். என்றுவது தண்ணீர் குடித்தறியேன். தினமும் விடியற்காலையில் எனது பாட்டி தோசை சுட எழுவது வழக்கம். எழுந்ததும் முதலில் தேநீர் தயாரிப்பார். அப்போது எனக்கு ஒரு கிண்ணம் வெந்நீர் தந்து படிக்கும்படி கூறிச் செல்வார்...... இரவு முழுவதும் வாடியிருக்கும் வயிற்றிற்கு அந்த ஒரு கிண்ணம் வெந்நீர் ஒரு புது உற்சாகத்தைக் கொடுக்கிறது என்பது உண்மை. வெந்நீர் குடிக்கப் பழகியதும் அதிலே ஒரு தனிச்சுவையை யாம் காணலாம்."

சில மருமக்கள் அரசியலில் அதிகம் பங்கெடுத்துக் கொள்வதாக எனக்குக் கிடைக்கும் கடிதங்களிலிருந்து தெரிகிறது. மாணவர்களாய் இருக்கும்போது அரசியலிற் பங்கெடுத்துக் கொள்வது வரவேற்கத்தக்கதல்ல. இருந்தும் அவர்களை அறியாமலே அரசியல் அவர்களை ஆட்கொண்டு விடுகிறதுபோலும். இதை அவர்கள் கட்டாயம் இனி மேலாவது கவனித்துக் கொள்ள வேண்டும். வணக்கம்.

## பிறந்த தின வாழ்த்துக்கள்

**15-6-52 — 21-6-52**

மே. 24. சி. சண்முகம்; கீ. 82. அ. பரமேஸ்வரன்; மே. 126. அ. பிலிப்; கீ. 131. ந. விஜயநாதன்; மே. 284. சி. சிவகாமி; மே. 320. சு. நடராசா; மே. 346. அ. ந. கிருஷ்ணசுவாமி; கீ. 357. வி. கிருஷ்ணமூர்த்தி, மே. 452. ஏ. ரஸாக்; மே. 460. க. பேரின்பவல்லி; மே. 502. பொ. தில்லைநாயகம்; மே. 606. அ. ப. முகம்மது இஸ்மாயில்.

மேற் குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டுவாழ்வார்களாக!

## மாமா பதில்

**மே. 309 நா. பொ. தருமலிங்கம்:** கந்தானையைப்பற்றி விபரமாக எழுதியிருக்கின்றீர். கட்டுரையிலே திருத்தங்கள் செய்து வெளியிடுவேன்.

**மே. 372 த. இ. கனகரத்தினம்:** ஸீசரின் தியாகம் என்னும் சின்னஞ் சிறுநூல் கிடைத்தது. உமது முயற்சியைப் பாராட்டுகின்றேன். விலை அதிகமாக இருக்கின்றது.

## புதிய மருமக்கள்

கீ. 624. இ. இராசகோபாலன், 'இராசபூஷணி' புகைரதஸ்தானத் தெரு, சுன்னுகம்.

மே. 625 தா. சண்முகநாதன் மல்லாகம், ஆங்கிலவித்தியாசாலை மல்லாகம்.

மிருகங்களும்பறவைகளும்-15

# கவரிமான்

**மே. 523.**
**நா. சோமசுந்தரன்**

மானம் போனபின்பு வானத்தைப் பார்த்துத் தியானஞ் செய்ய மாட்டார் பெரியோர். மானம் பறிபோன பின்னுல் வீரர்களும் உலகில் உயிர்வாழமாட்டார்கள். மானமே அவர்கள் உயிர்நாடி. உயிர்நாடியற்றுவிட்டால் உயிரே போகும். ஆனுல் மானத்தை இழந்துவிட்டால் உயிரையே போக்குவர் உத்தமர். ஆம், கவரிமானும் அதே பரம்பரையைச் சேர்ந்தது. உயிரைப் போக்கும் தன்மையது! தனது உடலிலே ஒரு சிறுமயிர்தானும் உதிர்ந்தபின் உயிர்வாழமாட்டாது. அவ்வளவு உரோசமுள்ளது; உணர்ச்சி மிகுந்தது. கவரிமானை இலங்கையிற் காணமுடியாது. மனிதர் பிடித்துவிட்டால் உயிர் துறக்கும் தகைமையுடைய மிருகத்தை எப்படிப் பிடித்து வளர்ப்பது என்ற காரணத்தாற்போலும் தெஹிவலைமிருகக் காட்சிச்சாலையிற்கூட கவரிமான் காணப்படவில்லை! ஆகவே நாங்கள் ஒருவரும் கவரிமானைப்பார்த்திருக்கமாட்டோம். இங்குள்ளகவரிமான்மானத்தின் சின்னம் என்பதனுற்போலும் அதன்மயிரை மனிதர் போற்றிப் பாதுகாக்கின்றனர்.

கவரிமான் மயிர் பல வழிகளிற் பிரயோசனமாகின்றது. கோவில்களிற் சாமரையாகக் கவரிமான் மயிர் உபயோகிக்கப்படுகின்றது கண்கூடு.

கவரிமானிடமிருந்து மானத்தைப் பின்பற்றி உயிரைத்தான் விட மக்கள் சமுதாயம் முன்வராவிட்டாலும், அந்த உத்தம குணத்தை ஓரளவு பின்பற்றினுலாகுதல் நன்மையுண்டாகும்.

**திருத்தம்**

சென்றவார இதழில் (8-6-52) 'இலக்கியச் செல்வம் 20'ல் காரியாசான் என்ற புலவர் 'சைன சமயத்தைச் சேர்ந்தவர்' என்றிருத்தல் வேண்டும். திருத்திக்கொள்க.


வெளிவந்துவிட்டது!

## கணிதப் பயிற்சிமாலை

இரண்டாம் பதிப்பு

ஐந்தாம்வகுப்புக்குரியது

இலங்கையின் பலபாகங்களிலுமுள்ள
பள்ளிக்கூடங்கள் உவந்தேற்றுள்ளன

உதாரணங்கள் அப்பியாசங்கள் உட்பட நல்ல
காகிதத்தில் அழகாக வெளியிடப்பட்டுள்ளது

இரண்டாம் மூன்றும் தவணைகளில் உபயோகிக்க ஏற்றது

விலை சதம் 80

## புதிய கணித வாய்பாடுகள்

கூட்டல் — பெருக்கல் — அளவை
புதிய முறையில் தயாரிக்கப்பெற்றுள்ளன.

பிரசுரம்: விலை சதம் 10

கொம்மேஷல் பிறெஸ் அன் ஸ்ரோர்ஸ்

[4623—iv] 30, பெரியதெரு, யாழ்ப்பாணம்


இலக்கியச் செல்வம் - 21

# ஐந்திணையைம்பது

**கே. எஸ். கிருஷ்ணன்**

இதுவரை நாங்கள் அறிந்துள்ள திரிகடுகம், நான்மணிக்கடிகை, சிறுபஞ்சமூலம் என்ற மூன்று நூல்களும அறிவு புகட்டுவதையே முக்கியநோக்கமாக உடையன. அவை சிறப்பாகப் புறப்பொருளையே விதந்தோதின.

இனி நாங்கள் அறியவிருக்கும் ஐந்திணையைப் பற்றிக் கூறும் நான்கு நூல்கள் அகப்பொருளை விளக்கவந்தன. உறுதிப்பொருள் நான்கினுள் மூன்றுவதான இன்பத்தைப்பற்றி இந்நூல்கள் கூறுகின்றனவாதலால் இவைகளை ஆர்வம் நிறைந்த இலக்கியமாகக் கொள்ளல் வேண்டும். (Literature of Power.)

ஐந்திணையை விதந்தோதும் நான்கு நூல்கள் யாவையெனின், ஐந்திணையைம்பது, ஐந்திணையெழுபது, திணைமாலை நூற்றைம்பது, திணைமொழியைம்பது என்பன. அவற்றுள் முதலாவதான ஐந்திணையைம்பதைப்பற்றிச் சிறிது இப்போது அறிந்து கொளவோம்.

ஐந்திணை யாவையெனின்: முல்லை, குறிஞ்சி, மருதம், பாலை, நெய்தல என்பன. இவைகள் அகப்பொருள் மரபுப்படி முறையே இருத்தல், புணர்தல், ஊடல், பிரிதல், இரங்கல் என்ற ஐந்து ஒழுக்கங்களை யுணர்த்துகின்றன. ஒவ்வொரு திணைக்கும் பத்துப்பாட்டுவீதம் ஐந்திணைகளுக்கு ஐம்பது வெண்பாக்கள் இந்நூலில் உண்டு.

இந்நூலாசிரியரான மாறன் பொறையனூர் என்ற புலவர் பாண்டிய மன்னரின் பெருமதிப்பைப் பெற்றிருந்த பெரியாரென அறியக்கிடக்கின்றது.

இந் நூலினது பெருமையைப் பாயிரச் செய்யுளின் ஈற்றடிகள் மிக அழகாகச் சிறப்பிக்கின்றன :-

'ஐந்திணை யைம்பதும் ஆர்வத்திறோதா
செந்தமிழ் சேரா தவர்.' [தா…



இல்லற இன்பம் எளிதில் பெற இதோ

# தங்க பஸ்பம்

நரம்புத் தளர்ச்சியை நீக்கி உடல்பலத்தைத் தந்து
நரம்புகளுக்கு முறுக்கேற்றி வாலிபத்தைத் தருகிறது
24 நாள் பஸ்பம் அனுபானத்துடன், ரூ 25-0-0.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி-S.I.

சந்தா விபரம்

ஆண்டுச் சந்தா :
இலங்கை-இந்தியா ரூ. 6-00
மலாயா — $ 6-00
தனிப் பிரதி சதம் 10. காசு 10

The EeLAKESARI

T'Phone No. 805

NATIONALIST TAMIL WEEKLY

Largest circulation in Ceylon, India, Burma & Malayan Union

Founder: N. PONNIAH

Vol. 22 | Chunnakam, Sunday, June 15, 1952 | No. 47

## சஞ்சலம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கலாம். ஆனால், இந்த இளம் மனதிலே கட்டிக்கொண்டிருக்கும் எண்ணங்கள், பச்சைக் கன்றுபோல வலிமையுடன் பற்றிக்கொண் டிருக்குமே! ... ........"

இப்படியாக எதை எதை எல்லாமோ அலசியது என் மனம். அதனிடையே, லக்ஷ்மியையும் அம்மாவையும் ஒருங்கே சேர்த்து என் மனக் கண்முன் வைத்து, அலசிக் கொண்டிருந்தன எண்ண அலைகள்.

"தனது சொந்த மகனுக்கும், கட்டிய கணவனுக்கும் ஆகவேண்டியன செய்வதற்காக வருந்துகிறாள் அம்மா. மனச்சஞ்சலமடைகிறாள். அப்படியானால், ஏழையாகப் பிறந்த ஒரே காரணத்தால், பிறருடைய வேலைகளைச் செய்து அதற்காகக் கஷ்டப்பட்டு, மனம் சோர்ந்து, தனது ஏழ்மையைக் கண்முன் அநுபவித்துக் கவலைப்படவேண்டுமா, வேறு ஒருத்தி? பணக்காரரின் நன்மைக்காக, சுகத்திற்காக, பாவம்; ஒரு ஏழைப் பெண் நித்திய கவலையை அநுபவிக்கவேண்டுமா? ஏழையாகப் பிறந்ததிற்கு அது பிராயச்சித்தமா என்ன?..."

இச் சஞ்சல அலைகளின் சாயை, ஏதோ ஒரு பெரும் உண்மையின் நிழலாக, என் சஞ்சலப்பட்ட நெஞ்சிலே தவழ்ந்து சாந்தியைக் கொடுத்தது!

## எழுத்துக் கலை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தக்க புதிர்களை எழுப்பும்; மற்றும் சில சமயங்களில் காதல், சாதல் என்பவை குறித்தும், சிந்தனை, சூழ்வு இவற்றால் தீர்க்கமுடியாத— விஞ்ஞானத்தால் மட்டும் தீர்க்கக்கூடிய — சில சிக்கல்களைக் குறித்தும் நினைவுகளைத் தூண்டும். இதற்கு மாறாக, உயிருள்ள முழுமைப்பு நெறியோ மனிதனின் வாழுஞ் சித்தத்தை வலுப்படுத்துகிறது; உண்மையோடு கலந்திருக்கும் எல்லாவிதக் கொடுமைகளையும் எதிர்க்கத் தூண்டுகிறது.

(தொடரும்)

கொழும்பில்
ஈழகேசரி
கிடைக்குமிடம் :
பேசிக் புக்ஸ்ரோல்
99, சதாம் வீதி
கோட்டை :: கொழும்பு




## கோட்டுவிற்பனவு விளம்பரம்

### இல. 8192.

உரும்பராய்
சின்னையா — பொன்னையா
வழக்காளி,

வண்ணார்பண்ணை மேற்கு
1. நமசிவாயம் — வல்லிபுரம்,
2. பெண் பாக்கியம் (முன் செல்லப்பா — தம்பிப்பிள்ளை கைம்பெண்) எதிராளிகள்.

யாழ்ப்பபாணம் டிஸ்திறிக் கோட்டில் 8192-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1952-ம் ஆண்டு ஜூலை (ஆடி) மாதம் 14-ந் திகதி (14-7-52) திங்கட்கிழமை பிற்பகல் 4-மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை:—** முதல் வட்டி ரூபாய் 1156-00-ம், இதில் ரூபாய் 1000-க்கு 21-9-51 திகதி தொடக்கம 31-1-52 திகதி வரைக்கும் 100-க்கு 12வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய்223, சதம் 60-ம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை மேற்கிறை "கறுவிலியடி" நிலைப்பரப்பு, ஐந்து 5-ம், வீடும், குசினியும் கிணறும், மற்றும் பயிர்களும், பனைகள் தென்னைகள் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு கதிரவேலு செல்லத்துரைக்கும் பங்காளருக்கு முரிய ஆதனம்; வடக்கும் மேற்கும் ஒழுங்கை; தெற்கு பழசுதெரு. இதடங்கலும்.

முற்பதிவு D 149/197.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer
தெல்லிப்பழை, 2-6-1952.

[4625]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

### இல. 5419

யாழ்ப்பாணம் — சிவியாதெரு
சுப்பிரமணியம் — பொன்னையா
வழக்காளி

சிவியாதெரு 1. சுப்பிரமணியம் — சோமசுந்தரம், 2. பெண் பூரணம். எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்5419-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை, 1952ம் ஆண்டு ஜூலை (ஆடி) மாதம் 15-ந் திகதி (15-7-52) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4 - மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:—** முதல் வட்டி ரூபாய் 1296/-ம், இதில் ரூபாய் 1000-க்கு 25-4-49 திகதி தொடக்கம் 6-12-51 திகதி வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 180-95 சதமும். இதில் ரூபாய் 500 இறுபட்டது.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணம் பகுதி சண்டிக்குளிக் கோயிற்பற்றுச் சிவியாதெருவிறை "சிதம்பரம் புலத்து வயலும், செம்பணியன் தெற்குக்காட்டு வயலும்". நெற்பரப்பு 40¼. எல்லை: கிழக்கு வாய்க்கால்; வடக்கு சின்னத்துரையின் ஆதனம்; மேற்கு பணை ரோட்டு; தெற்கு ஆறுமுகம் கதிரவேலுவின் ஆதனமும், மண் ரோட்டும். இதடங்கலும்.

முற்பதிவு D 172/68.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer
தெல்லிப்பழை 2-6-1952.

[4624]

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம்

ரூபா 34,36700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

**பங்குப் பணம் கட்டுமுறை :**

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்பட வேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு :**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்று வரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம் :**

க்ஷேமப் பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம் 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள் :**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத் தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன் :**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்

[4586]

இப்பத்திரிகை, இதன் சொந்தக்காரருக்காக, யாழ்ப்பாணம்—குரும்பசிட்டி, முத்தையா-சுபாரத்தினம் அவர்களால் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் 1952-ம் ஆண்டு ஜூன் 15-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப் பெற்றது.